# தேர்ந்த கட்டுரைகள் -35




செப்ரெம்பர்
1995

வாழ்க்கைப் போரில் ஒருவன் கலந்துகொள்ளவேண்டும். அந்தப் போரில் அவன் வெற்றி பெற்றாக வேண்டும். அந்த வெற்றியால் அவன் அனைவருக்கும் மேம்பட்டவனாக நிலைத்து நிற்கவேண்டும்.

''என் சகோதரர்களே, இந்த மண்ணுக்கு விசுவாச மாயிருங்கள். இப்பூமியின் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொள் ளுங்கள், உங்கள் அறிவும் அன்பும் இந்த மண்ணுக்குச் சமர்ப் பிக்கப்படட்டும், இந்த மண்ணின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் ஆவியையும், குணநலன்களையும் அந்த உணர்வுகளுக்குத் தக்கம் பண்ணுங்கள். எல்லாவற்றை யும் புதிய கோணத்தில் மதிப்பீடு செய்யுங்கள். அப்போது தான் நீங்கள் போராடுகிறவர்களாயும், சிருஷ்டி கர்த்தாக்க ளாகவும் மாறுவீர்கள்!''

சமத்துவத்தைப் போதிக்கும் விஷச் சிலந்திகளே! நீங்கள் கோஷிக்கும் 'சமத்துவம்' என்ற வாசகத்தின் பின்னால் அனைத்தையும் நசுக்கி காலடியில் போட்டுக்கொள்ள வேண்டு மென்ற உங்கள் அந்தரங்கமான ஆசை ஒளிந்திருப்பதை நானறிவேன். அதிருப்தியும் கசப்புணர்ச்சியும் தோற்றுவித்த வஞ்சகமே உங்கள் சித்தாந்தம்''.

சிந்தனையாளர்
- நீயெட்ஸே

# தேர்ந்த கட்டுரைகள்

**வெளியீடு-35**

வெளியீடு:
அரசியல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
செப்ரெம்பர், 1995


# வாசகர்களுக்கு

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 35 ஆவது வெளியீடாகும். பல்வேறுபட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இருந்து கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு எழுத்தாளரும் தங்களது பார்வையில் சரியென்றுபட்டதையே கட்டுரைகளாக எழுதுகின்றனர். இவை சரியானதா? பிழையானதா? என்பதைப் பகுப்பாய்வு செய்து தெரிந்துகொள்ளவேண்டியமை, வாசகர்களாகிய உங்களைப் பொறுத்ததாகும்.

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும், பேணுவதிலும் காட்டும் ஆர்வமே எம்மை மேலும் ஊக்குவிக்க உதவும். இந்நூல் தொடர்பான உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதியனுப்புங்கள்

# மக்களை நேசிக்க வேண்டும்



அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவைபுரியும் பணி. மக்களின் நல்வாழ்விற்கு ஆற்றப்படும் தொண்டு. எனவே, அரசியல் வேலை செய்யும் எமது போராளிகள் மக்களுக்குச் சேவை ஆற்றுவதையே இலட்சியமாகக்கொண்டு மக்களின் தொண்டர்களாகப் பணிபுரியவேண்டும்.

எமது இயக்கம் ஒரு விடுதலை இயக்கம். மக்களின் விடிவிற்காகவும் விடுதலைக்காகவும் போராடும் ஒருபுரட்சிகர இயக்கம். நாம் மக்களுக்காகவே எமது உயிரை அர்ப்பணித்துப் போராடுகிறோம். எனவே, நாம் எமது மக்களை நேசிக்கவேண்டும். எமது மக்களைக் கௌரவிக்கவேண்டும். அவர்களுடன் அன்புறவை வளர்த்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின்
கருத்துத் தொகுப்பிலிருந்து

## உள்ளே . . .


| விடயம் | பக்கம் |
|---|---|
| (1) வாவிகளில் மிதந்த சடலங்கள் | 01—05 |
| (2) ''ஐரிஷ்மோனா'' வைச் சுற்றியுள்ள மர்மமும், கபட நாடகமும் | 06—22 |
| (3) ஏற்றுக் கொள்ள வேண்டும் இல்லையேல் அழித்து விடவேண்டும். | 23—29 |
| (4) வேலூர் விபரீதம். | 30—40 |
| (5) யப்பானியர் கைகளில் போர்க் கைதிகள் பட்ட அவதிகள் | 41—51 |
| (6) தமிழீழ விடுதலைப் புலிகளும் மக்கள் முன்னணியும் சமாதான நடவடிக்கையும் | 52—62 |

# வாவிகளில் மிதந்த சடலங்கள்

*வாவிகளில் மிதந்த சடலங்கள் தொடர்பாக, படைப் புலனாய்வுப் பணிப் பகத்தைச் சேர்ந்த இருபது படையினரையும், அதிரடிப் படையைச் சேர்ந்த ஐந்து பொலிசாரையும் விசாரணை செய்தமை, படையினர் வட்டாரங்களில் பெரும் பரபரப்பான சூழ்நிலை ஒன்றை உருவாக்கியுள்ளது.*

குற்றவியல் புலனாய்வுப்பிரிவின் விசாரணைகளில் முன்னேற்றங்கள்.

**-பாதுகாப்பு நிருபர்**

*'ஐலண்ட்', 27-08-95*

மிதக்கும் சடலங்கள் பற்றிய மர்மத்தை ஆராயும்படி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் நியமிக்கப்பட்ட விசேடக் குற்றவியல் புலனாய்வுக் குழு, கொழும்பில் பத்துப் படையினரைப் புதனன்று விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளது. சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இச்சிறப்புக் குழுவிற்குக் குற்றவியல் புலனாய்வுப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் டி.வீ. சுமணசேகரா தலைமை தாங்குகின்றார்.

இதைத் தொடர்ந்து, இக்கொலைக்குப் பொறுப்பானவர்கள் என நம்பப்படும், படைப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல்களை வழங்கிவந்தவர்கள் என்று கருதப்படும் இரண்டு பொது மக்கள் உட்பட, சிறப்பு அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த, ஐந்து கொமாண்டோக்கள் மற்றும், பத்துப்படை அதிகாரிகள் வியாழன் மாலையில் இருந்து விசாரணை செய்யப் பட்டுவருகின்றனர்.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட படை அதிகாரிகளுள் இரண்டு கப்டன்களும் அடங்குவர்.

சிறைக்கைதிகளையும், பின்னர் இவர்களுடைய சடலங்களையும் ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்ற ஐந்து ஜீப்வண்டிகளும் கைப்பற்றப்பட்டு, ராஜகிரியாவிலுள்ள வெலிக்கடைக் காவல் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர், விசேட அதிரடிப்படைப் புலனாய்வுப் பிரிவு அலுவலகங்களுக்கும், படைப் புலனாய்வுப் பணிப்பகத்திற்கும் சென்றுள்ளனர்.

கடந்த மூன்றுமாத காலப்பகுதியில், குறைந்தபட்சம் 28 தமிழர்களாவது படையினரால் கடத்திச் செல்லப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுக், கொல்லப்பட்ட பின்னர், பொலகொட வாவி, தியவன்ன ஓயா, ஹமில்ரன் கால்வாய் ஆகியவற்றில் வீசப்பட்டதோடு குருநாகல், களுத்துறை மாவட்டங்களிலுள்ள வீதிகளிலும் இவர்களுடைய சடலங்கள் வீசப்பட்டன என இந்தச் சிறப்புக்குழு திடமாக நம்புகின்றது.

உண்மையில், இரு படை அதிகாரிகளை விசாரணை செய்ததும், ஐந்து வாகனங்களைக் கைப்பற்றியதும், பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுமணசேகரா தலைமையிலான இந்தக் குழு மர்மச் சடலங்கள் விவகாரத்தில் பெரும் வெற்றியீட்டியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இந்த ஆண்டின் மே மாத இறுதியிலிருந்து இந்தச் சடலங்கள் மிதக்கத் தொடங்கின. முதலில், ஊதிய நிலையில் காணப்பட்ட மூன்று சடலங்கள் பாணந்துறைக்கு அருகாமையில் பொலகொட வாவியில் மிதந்தன.

அதன் பின்னர், முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களின் பின்னர் வீசப்பட்ட பலசடலங்கள் இதே வாவியில் காணப்பட்டன.

## இனங்காணப்பட்டன

இச்சடலங்களுள் ஒன்றுமட்டும் அடையாளம் காணப்பட்டது. ஆனால் ஏனைய சடலங்களுள் அநேகமானவை தமிழர்களின் சடலங்கள் என்பது தெளிவாகியுள்ளன- ஒரு சடலத்தின் கையில் தமிழில் 'பச்சை' குத்தப்பட்டிருந்தது.

அநேகமாக 30 இற்கும், 40 இற்கும் இடைப்பட்ட வயதினைக் கொண்ட இவர்களின் ஆண்உறுப்புக்கள் சிதைக்கப்பட்டுக்

காணப்பட்டதுடன், சிலர்நீரில் மூழ்கடிக்கப்பட்டும், மற்றையவர்கள் கழுத்து நெரிக்கப்பட்டுக் காணப்பட்டதும், கொலைக் கும்பல்தான் இக்கொலைகளைச் செய்து வருகின்றது என்ற கவனத்தை ஈர்த்தது.

பின்னர், இந்த மர்மச்சடலங்கள் தொடர்பாக, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, ஈ.பி.டி.பி., புளொட் முதலான கட்சிகள் உட்பட பல தமிழ் அரசியல் கட்சிகள் சனாதிபதிக்குப் புகார் செய்ததையடுத்தும்-

மனித உரிமைகள் அமைப்புக்கள் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்ததையடுத்தும், பல சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

ஐந்து சடலங்கள் எரிக்கப்பட்ட நிலையில், குருநாகல் மாவட்டத்திலுள்ள அலவ்வா என்னுமிடத்தில் ஒதுக்குப்புறமாகவுள்ள மதகு ஒன்றின் கீழ், ஜூன் மாதத்தில் காணப்பட்டன. அவை, முதல் நாளன்று வெள்ளவத்தையிலிருந்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்களின் சடலங்கள் என்று அடையாளம் காணப்பட்டன.

ஆனால், அப்பகுதிபொலிஸாராலும் குற்றவியல் விசாரணைக் குழுவினாலும், இந்த மர்மக்கொலைகள் பற்றி எந்தவிதமான துப்புக்களையும் துலக்கமுடியவில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் காலப்பகுதியில் தீவிரமாக வன்செயல்களில் ஈடுபட்டு வந்த 'கொலைக் கும்பல்களின்' வேலையாக இது இருக்க வேண்டுமென்று இவர்கள் சந்தேகித்தனர். பொலிஸாரும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் நாட்டம் கொள்ளவில்லை.

ஆனால், ஜூலை மாதக்கடைசியில் பாராளுமன்றத்திலுள்ள பொலிஸார் தியவன்ன வாவியில் படகுகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இரு சடலங்களைக் கண்டனர். மேலும் இருசடலங்கள் வத்தளையில் உள்ள ஹமீல்ரன் கால்வாயில் மிதக்கக் காணப்பட்டன. தியவன்ன ஓயா பாராளுமன்றத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது. இதுவே, சனாதிபதியை இவ்விடயத்தில் தீவிரமாகச் செயற்படவைத்தது.

இச்சம்பவங்களுக்கு முதன்மை கொடுத்துச் செயற்படும்படி, குற்றவியற் புலனாய்வுத் துறையினருக்குச் சனாதிபதி உத்தரவு பிறப்பித்தார். சனாதிபதியின் பூரணமான அங்கீகாரத்தைப் பெற்றதும், ஐம்பதுக்கு மேற்பட்ட துப்பறியும் நிபுணர்கள் இந்த மர்மத்தைத் துலக்குவதற்காக ஆயத்தமாகினர்.

வாவியின் அடியில் அமிழ்ந்து இருக்கும் பொருட்டு, கற்களால் நிரப்பப்பட்ட சாக்குகளுடன் சேர்த்துக்கட்டப்பட்ட மூன்று நிர்வாணமான சடலங்களைத் துப்பறியும் நிபுணர்கள் ஒகஸ்ற் மாதம் 20 ஆம் நாள் கண்டுபிடித்ததையடுத்து, அவர்கள் எதிர்பாராத வெற்றியொன்றைத் தழுவிக்கொண்டனர். இச்சடலங்களின் ஒரு பகுதியை மீன்களும், மிருகங்களும் சாப்பிட்டிருந்தன.

## தேசத் துரோகி

தங்களது விசாரணைகள் தொடங்கியதிலிருந்து, பொலிஸ் அல்லது படையைச் சேர்ந்த ஒரு தேசத் துரோகக் குழுவே இந்த மர்மக் கொலைகளுக்குப் பொறுப்பாக இருக்கவேண்டும் எனக் குற்றவியல் புலனாய்வுக் குழு கருதியது.

அடையாளங் காணப்படாத நிலையில் உள்ள சடலங்களுள் அனேகமானவை வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்களின் சடலங்களாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. ஏனெனில், இச்சடலங்களின் சொந்தக்காரர்கள் கொழும்பிற்கு வந்து, இவற்றை அடையாளங் கண்டுகொள்ள முடியாதநிலையில் இருக்கலாம், அல்லது இந்த மர்மக் கொலைகள் பற்றி அறியாமலிருக்கலாம்.

கொழும்பில் அல்லது வேறு ஒரு பகுதியில் சுற்றிவளைப்பின்போது அகப்பட்ட உண்மையான விடுதலைப் புலிப் போராளிகளின் சடலங்களாகவும் இவை இருக்கக்கூடிய சாத்தியம் உண்டு. அவ்வாறாயினும், இவர்களைத் தங்கள் சொந்தக்காரர் என அடையாளங்காண எவரும் முன்வரமாட்டார்கள்.

படை அதிகாரிகள் மற்றும் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த கொமாண்டோக்கள் முதலானோருக்கு எதிராக இதுவரையிலும் குற்றஞ்சுமத்தப்படாமல் இருப்பினும், இப்பிரிவினர் கையாண்ட விதங்கள் மற்றும் இப்பிரிவினர் யார் என்பது பற்றிப் படைத்தளபதிக்குத் தெரியுமா என்பதே, இன்று எழுந்துள்ள முக்கியமான கேள்வியாகும்.

இக் கொலைகள் பற்றி அறிந்துள்ளவர்; அதனுடன் தொடர்புள்ளவர் என்று நம்பப்படுகின்ற மூத்த பிரிகேடியர் ஒருவர் பற்றி குற்றவியல் புலனாய்வுக் குழுவினர் இப்போது விசாரணை செய்துவருகின்றனர்.

எது எப்படியாயினும், இந்த இரண்டு கப்டன்களிலும் பார்க்க உயர் நிலையில் உள்ள அதிகாரிகளே இந்த மர்மக்

கொலைகளுக்குப் பொறுப்பாக இருந்தனர் என்பதை, இந்த நடவடிக்கைகளின்போது கையாண்ட வழிமுறைகளும், முக்கியத்துவமும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய ஒரு கொலைக் கும்பலுக்கு, கப்டன் தரத்திலுள்ள இரண்டு அதிகாரிகள் தலைமை தாங்குவதென்பது, உண்மையில் சாத்தியப்படாத ஒன்றாகும்.

இவ்விவகாரம் சர்வதேசச் சமூகத்தின் கண்டனங்களை ஈர்க்கக்கூடிய ஒன்றாகக் காணப்படுவதால், தனக்கு அபகீர்த்தி ஏற்படாதவாறு தன்னைப் பாதுகாத்துக்கொள்வதே, அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். மனித உரிமை மீறல் சம்பவங்களில் அரசு ஈடுபடவில்லை என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காக, பூரண விபரமான விசாரணை அறிக்கையொன்று தனக்குத் தேவை என சனாதிபதி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குப் பணித்துள்ளார்.

எனினும், கடந்த காலங்களில்தான் அரசினால் வன்முறைகள் முடுக்கிவிடப்பட்டன என உலகை நம்பவைப்பதற்காக, சென்ற ஆண்டு கடும் முயற்சியை மேற்கொண்ட அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கு, இவ்விவகாரம் தொடர்பாக அதிகாரிகள் உட்படப் படையினரும், பொலிஸ்காரர்களும் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற உண்மை மட்டும் போதுமானதாகும்.

இதற்கு, அரசாங்கத்திற்குள்ள ஒரேவழி, இந்த மர்மக் கொலைகளுக்குப் பொறுப்பாகவிருந்தவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்து, அவற்றை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடுவதாகும். அதன்மூலம், இத்தகைய நடத்தைகளை இந்த அரசாங்கம் பார்த்துக்கொண்டிராது என்பதை வெளிநாட்டு அரசுகளுக்கும், முப்படையினருக்கும் மற்றும் பொலிஸ் பிரிவினர் ஆகியோருக்கும் எடுத்துக்காட்ட வேண்டும்.

---

## ○ உலகின் பெரிய பாலைவனம்

### ஆபிரிக்காவிலுள்ள சகாராப் பாலைவனம்:

| | |
|---|---|
| மழை: | ஆண்டுமுழுவதும் 25சென்ரி மீற்றருக்கும் குறைவு |
| வெப்பநிலை: | ஆண்டுமுழுவதும் 45செல்சியஸ்சிற்கு மேல் |
| நீளம்: | கிழக்கு மேற்காக 3200மைல்கள் |
| அகலம்: | வடக்குத் தெற்காக 800லிருந்து 1400மைல்கள் வரை |
| பரப்பளவு: | 840,000 சதுரக் கிலோ மீற்றர்கள். உலகின் நிலப் பரப்பில் ½பங்கு. |

# ''ஐரிஷ்மோனா''வைச் சுற்றியுள்ள மர்மமும், கபட நாடகமும்

-பாதுகாப்பு நிருபர்
'ஐலண்ட்', 27-08-95

ஓகஸ்ற் மாதம் 28ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் ''ஐரிஷ்மோனா'' (IRIS MOANA) கப்பலில் 136 பயணிகளும் 8கப்பல் சிப்பந்திகளும் இருந்தனர். அவர்கள் யாழ்.குடாவிற்கு அப்பால், அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தீவுகளிலுள்ள தங்கள் வீடுகளுக்குத் திரும்பப் பயணஞ் செய்துகொண்டிருந்தனர்

பிற்பகல் 6மணிக்குச் சற்றுப் பின்னர், 80தொன் எடையுள்ள அக்கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு, வடபகுதிக் கரையோரப் பகுதியை நோக்கிச்சென்று கொண்டிருந்தது.

அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தால், நாளொன்றிற்கு 1,700 டொலர்கள் செலுத்தப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட அந்தக் கப்பல், போரினால் சின்னாபின்னமடைந்துள்ள வடபகுதியில் வாழும் மக்களுக்கு உணவு, மருந்துவகைகள் முதலானவற்றை எடுத்துச் சென்று வழங்கி வருகின்றது. ''ஐரிஷ்மோனா'' கப்பல் சேவையை, கொழும்பிலுள்ள 'நியூக்கோ' கப்பல் சேவை நிறுவனம் (NEUUCO SHIPPING OF COLOMBO) நடத்தி வந்தது.

அந்தக் கப்பலில் அதன் தலைவர் (கப்ரின்) லொயோலா பெர்னான்டோவைத் தவிர, மேலும் ஏழு கப்பல் சிப்பந்திகள் இருந்தனர். அவர்களுள் அநேகர், முன்னாளில் கடற்படையில் மாலுமிகளாகவிருந்தவர்களாவர். அவர்களில் நால்வர் தமிழர்கள்; ஏனையோர் சிங்களவர்களாவர்.

ஐரிஷ்மோனாவில் 200பயணிகள் பயணஞ்செய்யக்கூடியதாக இருந்த போதும், அன்று 144பயணிகள் மட்டுமே இருந்தனர். அவர்களுள் 7வயதிற்கு உட்பட 15சிறுவர்கள், 83ஆண்கள் மற்றும் 58பெண்கள் அடங்குவர். அவர்கள் அனைவரும் தமிழர்களாவர்.

சுமார் ஐம்பதுபேர் நயினாதீவிற்கும் 40 பேர் அனலை தீவிற்கும்; ஏனைய 45 பேரும் ஊர்காவற்றுறை, எழுவைதீவு, மற்றும் புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கும் சென்றுகொண்டிருந் தனர். அப்பயணிகள், தங்களது பயணச் சீட்டுக்களை, தீவுப் பகுதிகளைக் கட்டுப்படுத்துவதற்குப் படையினருக்கு உதவும் ஈழமக்கள் சனநாயக முன்னணியிடமிருந்து பெற்றுக்கொண்ட னர்.

இந்தப் பழைய கப்பலில் பயணஞ்செய்வது ஒருபோதும் வசதியாக இருந்ததில்லை. எனினும், இக்கப்பல்மூலம் மட்டுமே தீவுப்பகுதி மக்கள் தமது பயணங்களை மேற்கொள்ள முடியும். ஆகையால், பயணிகள் தமது பயணத்தைச் சகித்துக்கொண்டு பொறுமையுடன் மேற்கொள்கின்றனர். செவ்வாய்க்கிழமை காலை 5மணிக்கு இக்கப்பல் காரைநகர்க் கடற்படைத்தளத் தைச் சென்றடையவேண்டும்.

இக்கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. தமிழ் மக்கள் பயணஞ்செய்யும் ஒரு கப்பலை விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் என, கடற்படையினர் நம்பவில்லை. திருடிச் செல்லும் அளவிற்கு இக்கப்பல் பெறுமதிவாய்ந்ததுமல்ல. இக் கப்பல் திருடப்பட்டிருந்தால், அதன் பெரிய அளவு காரமாணக, அது கடற்படையினதும் மற்றும் வான்படையினதும் தாக்கு தலுக்குள்ளாகியிருக்கும்.

உண்மையில், இயந்திர உதிரிப்பாகங்கள், மற்றும் கப்பலைச் செலுத்திச் செல்வதற்நத் தேவையான கருவிகள் முதலானவற் றைத் தவிர இக்கப்பலில் திருடுவதற்குப் பெறுமதிவாய்ந்ததொன் றாகக் காணப்பட்டது சக்திவாய்ந்த வானொலிக்கருவி ஒன்றே யாகும்.

மேலும், கடந்த நான்கு மாதங்களில் கடற்படை பல கப்பல்களை இழந்துள்ளமையாலும், வடபகுதியில் உள்ள படை முகாம்கள் கடற்படைத் தளங்கள் மற்றும் வான்படைத் தளங் கள் முதலானவற்றிற்கு விநியோகப் பொருட்களை ஏற்றிச் செல்லுகின்ற கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியமை யாலும், கடற்படையானது இக்கப்பலுக்குப் பாதுகாப்பை வழங் கக்கூடியவகையில் போதியளவு கப்பல்களைக் கொண்டிருக்க வில்லை.

ஏறத்தாழ நான்கு ஆண்டுகளாக அத்தியாவசியச் சேவை கள் ஆணையாளர் நாயகம் தீவுப்பகுதிகளுக்கான கடற்சேவையை நடத்திவந்தமையால், இக்கப்பல் பாதுகாப்பாகவிருக்குமெனக் கருதப்பட்டது.

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் பெரிய உணவுக் கப்பல்களுக்கு மாத்திரம் பாதுகாப்பு வழங்கி வருகின்றமையால், தனது அதிகாரிகளுள் ஒருவரை இக்கப்பலுக்கு அனுப்பிப் பாதுகாப்பு வழங்க அது முன்வரவில்லை.

பயணத்தின் தொடக்கத்தின்போது, வட கிழக்குப் பகுதிக் கடற்பரப்பில் இரைச்சலுடன் செல்லும்வரை ஐரிஷ் மோனா பாதுகாப்பாகச் சென்றது. ஏனெனில்,முல்லைத்தீவு வரையிலான கடற்பரப்பு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ஆனால், நடுநிசிக்குச் சற்று முன்னர், முல்லைத்தீவுக் கடற்பரப்பைத் தாண்டி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதிக் கடற்பரப்பிற்குள் அக்கப்பல் சென்ற மாத்திரத்தே, விடுதலைப் புலிகள் அதனைத் தடுத்து நிறுத்தினர்.

''ஐரிஷ் மோனா'' கப்பலைப் புலிகள் எப்படிக் கடத்திச் சென்றனர் என்பது பற்றி இன்னமும் எதுவும் சரியாகத் தெரியவில்லை. அதிவேகமாகச் செல்லக்கூடிய தங்களது சிறு படகுகளில் 'ஐரிஷ் மோனா' விற்கு அருகிற் சென்று, இயந்திரத் துப்பாக்கி மூலம் சில வேட்டுக்களைத் தீர்த்து, அல்லது வாயால் உரக்கக்கத்தி, இக் கப்பலைத் தடுத்து நிறுத்துவது, கடற்புலிகளைப் பொறுத்தமட்டில் சுலபமான காரியமாகும்.

எனினும், கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டது. அதைத் தடுத்து நிறுத்த, கப்பல் சிப்பந்திகளுக்கு ஒரு வழியும் இருக்கவில்லை. அத்தோடு அவர்களுக்கு, அபாய அறிவிப்பை அனுப்புவதற்கான நேரமும் கிடைக்கவில்லை. சிலவேளைகளில் அவர்கள் அந்த அறிவிப்பை அனுப்ப முயற்சி செய்யாமலும் இருந்திருக்கலாம். புலிகள் தமக்குத் தீங்கு செய்யமாட்டார்கள் என்று அவர்கள் கருதியிருக்கலாம். ஏனெனில், கடந்த காலங்களில் கடற்புலிகள் இவ்வாறு நடந்துகொள்ளவில்லை. ''ஐரிஷ் மோனா'' தீவுப்பகுதிக்குச் சேவையைத் தொடங்குமுகமாகத் திருகோணமலைக்கு வருவதற்கு முன்னர், கற்பிட்டிக்கும் மன்னாருக்குமிடையில் சேவை ஆற்றியது. அக்காலப்பகுதியில் இக் கப்பலுக்கு எதுவிதப் பிரச்சினையும் ஏற்படவில்லை.

செவ்வாய்க்கிழமை நடுநிசிக்கும் பகல் வேளைக்குமிடையில், இக்கப்பலைக் கொண்டு புலிகள் என்ன செய்தனர் என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. கடற்கரையோரத்தில் அமைந்துள்ள கடற்புலிகளின் தளத்திற்கு மிக அண்மையில் இக்கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தமையால், தமக்குத் தேவை

யான அனைத்தையும் கடற்புலிகள் அகற்றியிருக்க முடியும். சிலவேளைகளில் இவர்கள் பயணிகளையும் அப்புறப்படுத்தியிருக்க முடியும்.

அதேவேளை, செவ்வாயன்று முல்லைத்தீவை அண்டிய பகுதியில் புலிகளின் கப்பல் ஒன்று ஆயுதத் தளபாடங்களை இறக்கும் பணியில் ஈடுபடக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாக எச்சரிக்கும் செய்தியொன்றை, படைப்புலனாய்வுப் பணியகம் கடற்படையினருக்கு அனுப்பியிருந்தது. அதைத் தொடர்ந்து, கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கொமொடோர் தயாசந்தகிரி, ஆயுதக் கப்பலைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு தனது கப்பல்களில் மூன்றை உடனடியாக அனுப்பிவைத்தார். ஆனால், அச்செய்தி பொய்யானது என்பதை அவர் அறியவில்லை.

கடற்படையின் பாரிய போர்க்கப்பலான 'எஸ்.எல்.என். எஸ். ஜயசாகர' பி-601 (S.L.N.S. JAYASAGARA P-601) அங்கு நின்றது. இக்கப்பல், அதிவேகத் தாக்குதல் படகுகள் என அழைக்கப்படும் 'டோறா பி - 458' (DVORA P-4 8) என்னும் கப்பலுடனும் சுப்பர் டோறா பி 463 (SUPER DVORA P-463) என்னும் கப்பலுடனும் அந்தப்பகுதிக்கு அனுப்பப்பட்டது.

இரண்டு 25 மில்லி மீற்றர் துப்பாக்கிகளும், இரண்டு 14.5 மில்லி மீற்றர் துப்பாக்கிகளும் பொருத்தப்பட்ட, 330 தொன் எடையுள்ள 'ஜயசாகர' ரோந்துப்படகு, எந்தவோர் ஆயுதந் தாங்கிய கப்பலுக்கும் ஈடுகொடுக்கக் கூடியது. இரண்டு 20 மில்லி மீற்றர் துப்பாக்கிகள், இரண்டு 12.7 மில்லி மீற்றர் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட அதிவேகத் தாக்குதல் படகுகளினால், தப்பித்துச்செல்ல முயலும் எந்தவொரு விடுதலைப் புலிகளின் படகையும் விரட்டிச்சென்று பிடிக்க முடியும்.

அதிகாலையில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் பிரிந்து சென்று, இந்த மூன்று போர்க் கப்பல்களும் தேடுதல் வேட்டையைத் தொடங்கின.

கரையோரத்தில் இருந்து 1-5 மைல் தொலைவில் நங்கூரமிடப்பட்டிருந்த 'ஐரிஷ் மோனா' வைப் பிற்பகல் 1-15 மணியளவில் கண்ட 'பி-465 (P-465)' கப்பல், சந்தேகத்திற்கிடமான கப்பல் ஒன்றை தான்கண்டுள்ளதாக, மற்றைய இரு கப்பல்களுக்கும் வானொலிச் செய்தி மூலம் அறிவித்தது. 'ஜயசாகர' வும் பி- 465 கப்பலும் உடனடியாக அத்திசையை நோக்கி விரைந்தன. அத்துடன், திருகோணமலையில் உள்ள கிழக்குப்

பிராந்தியக் கட்டளைப் பணியகத்திற்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

அதேவேளை, பி-483 கப்பலின் தலைவன் லெப்ரினன்ற் நளின் விஜயசிங்க, தான் கண்டுபிடித்த கப்பல் 'ஐரிஷ் மோனா' என்று தெரிந்து கொள்ளாமையால் அக்கப்பலை நோக்கி விரைந்தார்.

திருகோணமலையிலும் வடக்கு-கிழக்குக் கடற்பரப்பிலும் இதற்கு முன்னர் அக்கப்பலைப் பல தடவைகள் கண்ட இவர்களால் அடையாளம் காணமுடியாமல் இருந்தாலுங்கூட, அக்தக் கப்பலை நோக்கி அண்மையில் சென்ற சுப்பர் டோறாப் படகின் சிப்பந்திகளினால் கப்பலின் பின்புறத்திலும் முன்புறத்திலும் 'ஐரிஷ் மோனா' என்று பெயர் எழுதப்பட்டிருந்ததை நிச்சயமாகப் பார்த்திருக்க முடியும்.

இறுதி நேரம் வரையிலும் அந்தக் கப்பலின் சுற்றாடலில் கடற்புலிகளின் படகுகள் எதனையும் கடற்படையினர் சந்திக்காததன் காரணத்தால், பி - 463 கப்பல் எதுவித எச்சரிக்கைச் செய்திகளையும் அனுப்பவில்லைப்போல் தோன்றுகின்றது.

ஆனால், பிற்பகல் 1.40 மணியளவில் இப்பகுதியை நோக்கி விரைந்து வந்த 'ஜயசாகர' மற்றும் பி - 456 கப்பலிலிருந்த கடற்படையினர் குண்டு வெடிப்புச் சத்தம் ஒன்றைக் கேட்டதுடன், பி - 463 கப்பலிலிருந்து தீச்சுவாலைகள் மேல் எழுவதையும் கண்டனர். ஒரு சில நிமிடங்களுள் பி – 463 கப்பல் கடலில் மூழ்கியது. பி - 463 கப்பலை அழித்தது என்ன என்பது தெரியவில்லை. அது, ஐரிஷ் மோனாவிலிருந்து, அல்லது கடற்புலிகளின் படகொன்றிலிருந்து ஏவப்பட்ட றொக்கற் குண்டினாலோ, அல்லது குண்டுகளாலோ அழிக்கப்பட்டிருக்கலாம் என்று கூறலாம் போன்று தோன்றுகின்றது.

மேலும், அது கடற்புலிகளின் கடற் கண்ணிவெடியினால், அல்லது வெடிப் பொருட்கள் நிரப்பப்பட்ட கடற்புலிகளின் படகினால், அல்லது புலிகள் பெற்றுள்ள தரையில் இருந்து தரைக்குச் செலுத்தும் ஏவுகணையினால் இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம்.

பீரங்கிப் படகிலிருந்தோர், உண்மையில் பேரதிர்ச்சிக்குள்ளாயினர். ஏனெனில், அவர்கள் அவ்விடத்தை விட்டுச்செல்ல முயற்சிக்கவில்லை. அத்தோடு, அவர்களால் கடற்புலிகளின் படகுகள் எதனையும் சேதப்படுத்தவும் முடியவில்லை.

'ஜயசாகர'க் கப்பலும் பி – 456 கப்பலும் மிக அண்மையில் வந்தவுடன், அதிலுள்ள கடற்படையினர் கடற்புலிகளின் பல படகுகளைக் கண்டனர். அப்படகுகள் "ஐரிஷ்மோனா" கப்பலுக்குச் செல்வதும், பின்னர் கரையோரத்திற்குச் செல்வதுமாகக் காணப்பட்டன. புலிகளின் சில படகுகள், இறந்த கடற்படைச்சிப்பாய்களின் உடல்களைக் கடலில் இருந்து வெளியே இழுத்து எடுத்துக்கொண்டிருந்தன போல் தென்பட்டது.

'ஜயசாகர' வினதும், பி – 456 கப்பலினதும் தலைவர்கள், அந்தக்கப்பல் ஐரிஷ்மோனா'' என்பதை அறிந்துகொண்டனர். ஆனால், அக்கப்பல் கடத்தப்பட்டுள்ளதா என்பதைச் சரியாகக் கூறமுடியவில்லை.

மேலும், மேலதிகக் கப்பல்களை உடனடியாக அனுப்புமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அத்துடன், நெருங்கிச் சென்றால் புலிகளுடன் சண்டையிட வேண்டும்; அச்சண்டையில், ஐரிஷ் மோனாவில் இன்னமும் இருக்கின்றார்கள் என்று நம்பப்படும் பொதுமக்கள் கொல்லப்படுவார்கள். அதனால் நெருங்கிச்சென்று எஞ்சியிருப்பவர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடமுடியாமல் நின்றுகொண்டிருந்தனர்.

உடனடியாக அபாயமணி திருகோணமலையில் எழுப்பப்பட்டது. கொழும்பில் உள்ள கடற்படைத் தலைமையகத்திற்கு, டோறாக் கப்பலை இழந்தது பற்றியும், மற்றும் 'ஐரிஸ்' மோனா' கப்பல் பற்றிய புதிய நிலைமை மற்றும் அக்கப்பலில் இருந்த பயணிகள் எங்கிருக்கின்றார்கள் என்பது பற்றித் தெரியாமை போன்ற விடயங்கள் அறிவிக்கப்பட்டன.

அவ்வேளையில், திருகோணமலையில் இருந்த அனைத்து நடவடிக்கைகள் தளபதி மேஜர் ஜெனரல் றோஹான் தலுவத்தைக்கும் இந்நிலைமை குறித்துக் கூறப்பட்டது.

கடற்படைக்குச் சொந்தமான சீனத்தயாரிப்பான இரண்டு பெரிய பீரங்கிப்படகுகளும், மேலும் இஸ்ரேல் தயாரிப்பான மூன்று டோறா, சுப்பர் டோறாப் படகுகளும் திருகோணமலையில் இருந்து 60 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள போர் முனைக்கு விரைந்தன. ஆனால், இப்படகுகள் இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின்னரே போர்முனையைச் சென்றடையமுடியும்.

இதனிடையில், திருகோணமலையிருந்தும் அநுராதபுரத்திலிருந்தும் போர்முனையை வந்தடைந்த பல பெல்–212 (BELL 212)

ரகஉலங்குவானூர்திகள், உயிருடன் போராடிக்கொண்டிருப்பவர்களைத் தேடும் பணியில் அப்பகுதியைச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தன. ஆனால், சுட்டு வீழ்த்தப்படலாம் என்ற அச்சங் காரணமாக, கப்பல் மூழ்கடிக்கப்பட்ட இடத்தை இந்த உலங்கு வானூர்திகளால் நெருங்க முடியவில்லை.

அப்பகுதியில் இருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தொலைவிற்குள் படைமுகாம் ஒன்று இருந்தபொழுதிலும், சில பல காரணங்களை முன்னிட்டு, அது உடனடியாகப் போரில் தன்னை இணைத்துக்கொள்ளவில்லை.

இதனிடையில், விடுதலைப் புலிகளின் தந்திரமிக்க தளபதிகளுள் ஒருவரான கடற்புலிகளின் தளபதி சூசை, கரையில் இருந்தவண்ணம் இந்த நடவடிக்கையை நெறிப்படுத்திக்கொண்டிருக்கின்றார் எனப் படைப் புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை ஒன்றை விடுத்தது.

மாலை 4.30 மணியளவில், கடற்படையினருக்கு உதவியாகக் கடற்படைக் கப்பல்கள் சென்றுகொண்டிருக்கையில், சீனத் தயாரிப்பான 'எஃப்-7 (F-7) ரக ஜெற் வானூர்திகள் சீனக்குடா வான்படைத்தளத்தில் இருந்து புறப்பட்டன. முல்லைத்தீவுக்கு மேலாக வந்த போது 'ஜெற்' வானூர்திகள், கடற்புலிகளின் தளத்தின்மீது குண்டுகளைப் பொழிந்தன. ஆனால் குண்டுகள் இலக்குகள்மீது விழவில்லைப்போல் தோன்றுகின்றது. ஏனெனில், விடுதலைப் புலிகள் தமது தரப்பில் இழப்பு ஏதும் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கவில்லை. அத்தோடு, புலிகளைக் கொன்றுள்ளதாக வான்படையும் கூறவில்லை.

தரையில் இருந்து வான் நோக்கிப் பாயும் ஏவுகணை தம் மீது ஏவப்பட்டது என முதலிற் கூறிய வானூர்தி ஓட்டிகள், பின்னர் ஒருவேளை தாம் வீசிய குண்டில் இருந்து வெளிப்பட்ட புகை, ஏவுகணையின் பின்பகுதிபோல் தோன்றியிருக்கலாம் என்பதை ஏற்றுக்கொண்டனர்.

கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த ஏவுகணைகளை ஏவும் இரண்டு நிலையங்களை அன்று மாலை தாங்கள் அழித்து விட்டதாக வான்படையினர் கூறினர்.

அருகாமையில் உள்ள படை முகாமில் இருந்து ஆட்லறி (ARTILLERY) ஏவுகணை வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அவை சரியான இலக்கைச் சென்றடையவில்லை. இதனால், விடுதலைப் புலிகள் எவரும் கொல்லப்படவில்லை.

மாலை 5.30மணியளவில் திருகோணமலையில் இருந்து வேறுபல பீரங்கிக் கப்பல்கள் வந்து சேர்ந்த பின்னர், செயற்படுவதற்கு ஏற்ற நேரம் அதுதான் எனத் தீர்மானிக்கப்பட்டது.

பகற்பொழுது மறைவதற்கு ஒரு மணி நேரம் இருக்கையில் நீரினுள் மூழ்கிக்கொண்டிருந்த பி-463 கப்பலைச் சேர்ந்த தப்பிப் பிழைத்திருப்பவர்களை உடனடியாகத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியைத் தொடங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மூழ்கிப்போன கப்பலில் ஒரு சிறு பகுதி மட்டுமே நீருக்கு மேல் தெரிந்தது.

ஆனால், தரித்துநிற்கும் 'ஐரிஷ்மோனா' பாரிய பிரச்சினையாக இருந்தது. ஐரிஷ்மோனாக் கப்பலின் தலைவனுடன் வானொலி மூலம் தொடர்புகொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. இப்பொழுது, அக்கப்பல் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது என்பது தெளிவாயிற்று.

இத்தகையதொரு சூழ்நிலையில், சீனத்தயாரிப்பான பீரங்கிக் கப்பலில் இருந்து கனரகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ளக்கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஏனெனில், ஐரிஷ்மோனாவில் உள்ள பயணிகள் கொல்லப்படுவர். அத்தோடு, பெறுமதிவாய்ந்ததும், மெதுவாகச் செல்லக்கூடியதுமான 'ஜயசாகர', விடுதலைப் புலிகளின் பல படகுகளின் தாக்குதல்களுக்குத் தாக்குப்பிடிக்குந் திறனற்றதுமாகக் காணப்படுவதுடன், விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படகுத் தாக்குதலுக்கு இலகுவாக இலக்காகக்கூடிய ஒன்றாகவிருந்தது. அது, மன்னார்த்தீவுக்கு அப்பால் கடந்த செப்ரெம்பர் மாதம் மூழ்கடிக்கப்பட்ட ''சாகரவர்த்தனா'' (SAGARAWARDENE) வைப் போன்ற கப்பலாகும்.

குறைந்த பட்சம் பதினைந்திற்கு மேற்பட்ட கடற்புலிகளின் படகுகள் காணப்பட்டபோதிலும், நான்கு டோறாக் கப்பல்களும் தாக்குதலைத் தொடுத்தன.

மீண்டும் சண்டை தொடங்கி ஒரு சில நிமிடங்களில், மாலை 5.40மணியளவில் பி–456 கப்பலில் பாரிய குண்டு ஒன்று வெடித்ததை மற்றைய கப்பல்களில் நின்ற கடற்படையினர் கண்டனர். டோறாவில் இயந்திரம் செயல் இழந்து, அதை முற்றாக இயங்காமற் செய்துவிட்டது.

குண்டு வெடித்ததுபோல, கடற்கரையில் இருந்து தீச்சுவாலை ஒன்று வெளிக்கிளம்பியதைத் தாங்கள் கண்டதாக, அருகாமை

யிலுள்ளபடைமுகாமில் இருந்து சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த படையினர் கூறினர்.

1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற பூநகரிச் சமரின்போது தங்களுடன் எடுத்துச்சென்ற செக்கோஸ்லோவாக்கியத் தயாரிப்பான 'ரி-55' (T55) ரக முக்கியபோர்டாங்கி (TANK) யைப்புலிகள் இங்கு கொண்டுவந்துள்ளனர் என்று இப்பொழுது நம்பப்படுகின்றது. இந்தப் போர்டாங்கி, முல்லைத்தீவுக்குக் கொண்டுவரப்பட்டுக் கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இந்த டாங்கியில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கி தான், பி-456 கப்பலைச் சேதப்படுத்துவதற்குப் பாவிக்கப்பட்டது என்று நம்பப்படுகின்றது.

பூநகரிச் சமரில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஐந்து கரையோர ரோந்துப் படகுகளில், இரண்டு படகுகள் தான் கடற்புலிகளின் பெரிய படகுகள் என்பதை, மற்றைய டோறாப் பீரங்கிப் படகுகளில் இருந்த கடற்படையினர் கண்டுகொண்டனர்.

தமது கப்பல் இயக்கமற்ற நிலையில் கடலில் நின்றாலும், பி-456 கப்பலில்இருந்த கடற்படையினர் தமது நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்து, தம்மிடம் இருந்த துப்பாக்கிகள் அனைத்தையும் கொண்டு, கடற்புலிகளின் படகுகளை நோக்கிச் சுட்டு, முடிவுவரை போராடினர்.

அவர்களுடைய முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. எனினும், அவர்கள் தங்களது துப்பாக்கிகள் மூலம் ஒரு கரையோர ரோந்துப் படகை மூழ்கடித்தனர். வேறு படகுகளுடன் முன்னேறி வந்த கடற்புலிகள், மற்றைய டோறாப் படகைத் தங்களது துப்பாக்கி மூலம் துண்டு துண்டாக்கினர்.

இருள் சூழ்ந்ததும், தங்களது பீரங்கிக் கப்பல்கள் எப்படி மூழ்கடிக்கப்பட்டன என்பதையும், மற்றும் ஐரிஷ்மோனாவிலிருந்த பயணிகளுக்கு என்ன நேர்ந்தது என்பதையும் புரிந்துகொள்ள முடியாத நிலையில் மற்றைய கடற்படைக் கலங்கள் பாதுகாப்பான இடங்களை நாடித் தூரச்சென்றன.

கப்பலில் உள்ள பெண்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டுவிடுவர் என்ற அச்சங் காரணமாகக் கடற்படையினர் எதிர்த்தாக்குதலை மேற்கொள்ளமாட்டார்கள் என்ற நம்பிக்கையில், 144 பயணிகளைக்கொண்ட அக்கப்பலை விடுதலைப் புலிகள் கடற்படைக் கப்பலைத் தாக்குவதற்குப் பாவித்திருக்கக் கூடிய சாத்தியமும் இருந்தது.

இதனிடையில், கடத்திச் செல்லப்பட்ட ஐரிஷ்மோனா கப்பலினால் ஏற்படக் கூடிய அபாயத்தை உணர்ந்துகொண்ட கடற்படைத் தலைமையகம், எந்தச் சூழ்நிலையிலும் அக்கப்பலைத் திருகோணமலைத் துறைமுகத்தினுள் அனுமதிக்கக்கூடாது எனத் தெளிவான உத்தரவுகளைப் பிறப்பித்தது.

அக்கப்பல் வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்டு, கடற்படையின் மிகப்பெரிய தளத்தை நிர்மூலமாக்கும் பொருட்டு, தற்கொலைப் பணியில் ஈடுபடுத்தப்படலாம் என்ற அச்சமே அதற்கான காரணமாகும்.

ஐந்து மைல்களுக்கு அப்பால் தரித்த வண்ணம் கடற்படைப் படகுகள் இரவு முழுவதும் விழித்தவாறு நின்றன.

அதிகாலையில் அவர்கள், கடற்புலிகளின் படகுகள் ஐரிஷ்மோனாக் கப்பலுக்குச் செல்வதையும், பின்னர் கடற்கரைக்கு வருவதையும், விடுதலைப் புலிப் போராளிகள் கப்பலில் ஏறுவதையும் இறங்குவதையும் தெளிவாகக் கண்டனர்.

அருகாமையிலிருந்த முகாமைச்சேர்ந்த படையினரும், வான்படையினரின் உலங்குவானூர்திகளும், வானூர்திகளும் விழிப்புடன் இருந்தன.

புதன்கிழமையன்று காலை 10.30 மணியளவில் ஐரிஷ்மோனா ஆழ்கடலை நோக்கிச் செல்லத்தொடங்கியுள்ளது எனப் படையினர் அறிவித்தனர். இதனையடுத்து, இக்கப்பல் எந்த வழியால் செல்லவுள்ளது என்பதை அறிவதற்காக, கடற்படையினர் இடைவிடாமல் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

எனினும், இது ஒரு பொய்யான எச்சரிக்கை என்றும், கப்பல் அதே இடத்தில்தான் இன்னமும் நிற்கின்றது என்றும் பின்னர் தெரிய வந்தது.

இதனிடையில், உண்மையில் என்ன நடக்கின்றது என்பது பற்றி அறிந்துகொள்ள, கொழும்பில் உள்ள சில படை உயர் அதிகாரிகள் ஆவலாயிருந்தனர்.

தங்களது பீரங்கிக் கப்பல்கள் எப்படி மூழ்கடிக்கப்பட்டன? ஐரிஷ்மோனாவில் இருந்த 144 பொதுமக்களுக்கு என்ன நடந்தது? என்பது பற்றி ஏதும் தெரியாத நிலையில் கடற்படையினர், செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்த போதும், இரண்டு அதிவேகத் தாக்குதற் படகுகளைத் தாங்கள் இழந்துள்ளதாக ஒப்புக் கொண்டனர்.

போர் தொடர்பாக, கடற்படை எதுவிதத் தகவல்களையும் அனுப்பவில்லையென்றும்- தங்களைப் பொறுத்தமட்டில், எதுவித அசம்பாவிதங்களும் நிகழவில்லையென்றும் கூட்டுப்படைத் தலைமையகம் செய்தியாளருக்குத் தெரிவித்தது.

படைப் பேச்சாளரான பிரிகேடியர் சரத் முனசிங்க, வாராந்தச் செய்தியாளர் மகாநாட்டில் எட்டுச் சிறியபடகுகள் உட்பட, ஒவ்வொன்றிலும் 30கடற்புலிகள் சென்ற இரண்டு பெரிய கடற்புலிப் படகுகளை பி-456 கப்பல் அழித்துள்ளது என்றுகூறி, படையினர் பெரும் வெற்றி ஒன்றை நிலைநாட்டியுள்ளனர் என்ற அபிப்பிராயத்தைத் தோற்றுவிக்க முற்பட்டார்.

நான்கு டோறாப் படகுகள் கடற்புலிப் படகுகளைத் தாக்கும்போது, போராளிகளை மட்டும் ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் விடுதலைப் புலிகளின் பெரிய கப்பல்கள் அவ்விடத்தில் நின்றிருக்கும் என்பது, ஒருபோதும் நடந்திருக்க முடியாது. இப்பெரிய படகுகள் போரில் ஈடுபடுவதில்லை.

முனசிங்காவின் கூற்றுக்கு மாறாக, ஒரேயொரு கரையோர ரோந்துப் படகு தான் மூழ்கடிக்கப்பட்டது என்பதை, மற்றைய டோறாப் படகுகளிலிருந்த அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

இவை அனைத்தும் பொதுவாக, பொதுமக்கள் மற்றும் படையினர் மத்தியில் குழப்பத்தை அதிகரிக்கச் செய்யுமேதவிர, வேறு ஒன்றையும் உண்டுபண்ணமாட்டாது.

இதனிடையில், அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகமும், கப்பற் போக்குவரத்து, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளருமான எம். என். யுனைட் (M.N. JUNAID), கப்பற் பிரயாணிகளைக் கண்டு பிடிப்பதில் தமக்கு உதவுமாறு கேட்டு, கொழும்பில் உள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் மார்க்கோ அல்தருக்கு புதன்கிழமையன்று மாலை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

144 பயணிகளுக்கும் என்ன நடந்தது என்பது பற்றி விடுதலைப் புலிகளிடம் விசாரிக்கும்படி, யாழ்ப்பாணத்தில் உள்ள தனது பிரதிநிதிக்குச் சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்கம் உடனடியாக ஒரு செய்தியொன்றை அனுப்பியது. ஆனால், புலிகளிடமிருந்து பதில் எதுவும் உடனடியாகக் கிடைக்கவில்லை.

எனினும், கடற்படையினரின் ஐந்து சடலங்களை ஒப்படைக்க விடுதலைப் புலிகள் முன்வந்தனர். செஞ்சிலுவைச் சங்கத்தினர் வியாழக்கிழமையன்று காலை வவுனியாவில் படை

யினரிடம் இச்சடலங்களை ஒப்படைத்தனர். பின்னர், அவை அங்கிருந்து கொழும்பிற்கு எடுத்துச்செல்லப்பட்டன.

அச்சடலங்கள், பி-463 கப்பலைச் சேர்ந்த லெப்ரினன்ற் நளின் விஜயசிங்க, மெக்கானிக் யு. கே. டி. சேனகா, மாலுமி டி. டபிள்யூ. எச். டபிள்யூ. கே. நிஸ்ஸங்கா, மாலுமி எல். ஏ பி. கே. பெரேரா மற்றும் பி-456 கப்பலைச் சேர்ந்த மாலுமி யு. எஸ். விதாரண முதலானோருடையவை என இனங்காணப் பட்டன.

இன்னும் பதினொரு பேர் காணாமற்போயுள்ளனர். அவர்களின் விபரங்கள் பின்வருமாறு:-

01. சப்-லெப்ரினன்ற் எம். ரி. எச். டபிள்யூ. குமாரதுங்கா
02. மாலுமி எம். கே. தர்மவர்த்தனா
03. இயந்திரப் பொறியியலாளர் பி. எஸ். டி. ஜெயரட்னா
04. தொடர்பாளர் ஈ. எஃப். பித்துவாகலகமகே
05. மாலுமி எச். என். எல். பண்டார

மேற்கூறப்பட்ட அனைவரும் பி-463 கப்பலைச் சேர்ந்தவர்களாவர்.

01. லெப்ரினன்ற் ஹேமந்த விஜயவர்த்தனா
02. லெப்ரினன்ற் ரி. என். ஹெரத்
03. மாலுமி எச். டபிள்யூ. ஆர். பி. குமாரா
04. மாலுமி ரி. ஜி. கந்தகமகே
05. இயந்திரப் பொறியியலாளர் எச். ரி. சந்தனா
06. மெக்கானிக் கே. கே. எஃப். நிசந்தா

மேற்கூறப்பட்டவர்கள் அனைவரும் பி-456 கப்பலைச் சேர்ந்தவர்களாவர்.

தாங்கள் ஒருவரையும் சிறைப்பிடிக்கவில்லை என, விடுதலைப் புலிகள் புதன்கிழமையன்று செஞ்சிலுவைச்சங்கத்தினரிடம் கூறினார்கள்.

வியாழக்கிழமை திரு. யுனைட் இரண்டாவது கடிதம் ஒன்றை செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு அனுப்பினார்.

இக்கடிதத்தில், 'தகவல்களைப் பெறுவதிலும், பயணிகளை விடுவிப்பதிலும், மற்றும் கப்பலையும் கப்பற் சிப்பந்திகளையும் விடுவிப்பதிலும் தங்களின் மதிப்பிற்குரிய ஒத்துழைப்பு பணிவுடன் வேண்டப்படுகின்றது' என்று அவர் எழுதி இருந்தார்.

சம்பவம் இடம்பெறுகின்ற இடத்தில் நின்ற புலிகளுடன் பேசும் பொருட்டு, செஞ்சிலுவைச் சங்கம் உடனடியாகத் தனது பிரதிநிதி ஒருவரைத் தரைமார்க்கமாக முல்லைத்தீவுக்கு அனுப்பியது. அங்கு கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கு மிடையில் ஒருவகையான முறுகல் நிலை தொடர்ந்து வருகின்றது.

இப்பிரதிநிதி காத்துக்கொண்டிருந்து மூன்று நாட்கள் நீடித்தது. இறுதியில், வெள்ளியன்று விடுதலைப் புலிகள் கப்பற் பயணிகளைப் பார்ப்பதற்குச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியை அனுமதித்தனர். ஆனால், பயணிகள் எவரும் கப்பலில் இல்லை. அவர்கள் முல்லைத்தீவிற்குச் சமீபமாகவிருந்த புலிகளின் தளத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

பயணிகளுள் அனேகமானவரைத் தாம்விடுதலை செய்வோம் என்றும், ஆனால் ஈ.பி.டி.பி. யைச் சேர்ந்தவர்கள் என்று தாம் கருதுபவர்களையும், கப்பற்சிப்பந்திகளையும் தாம் தடுத்து வைப்போம். என்றும் விடுதலைப் புலிகள் கூறினர்.

கப்பற் பயணிகளின் விடுதலை தொடர்பான விபரங்களையோ, அன்றி இவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பது பற்றியோ அரசாங்கமோ, அன்றி செஞ்சிலுவைச் சங்கமோ எதுவிதத் தகவலையும் இக்கட்டுரை எழுதப்பட்ட வேளையிலும் வழங்கவில்லை.

ஐரிஷ்மோனாக் கப்பலைப் புலிகள் திருப்பி ஒப்படைப்பார்களா? அல்லது அதனைத் தகர்த்து விடுவார்களா? அல்லது அதனை அவர்கள் பாவிக்க முனைவார்களா? என்பது பற்றியும் எதுவும் தெரியவில்லை.

ஐரிஷ்மோனா விவகாரம் கடற்படைக்குப்பேரிழப்பை ஏற்படுத்தி உள்ளதோடு, பல கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று முல்லைத்தீவுக்கு அப்பால் ஆயுதங்களை இறக்கவுள்ளது என்று, படைப் புலனாய்வுப் பிரிவு ஏன் இலகுவாக நம்பியது? படைப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களைப் புலிகள் நல்ல முறையில் ஏமாற்றியுள்ளனர் என்பது தெளிவாகும். மேலும், மற்றைய ஆயுதப் படையைச் சேர்ந்தவர்களைப் விடுதலைப் புலிகளின் பொறிக்குள் அனுப்புவதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தவேண்டும்.

படைப் புலனாய்வுத் துறையினர் இத்தகவலை எங்கிருந்து பெற்றாலும்கூட, இப்பொழுது ஓர் உண்மை புலப்படுகின்றது. அதாவது, ஆயுதக் கப்பலைத் தேடிக் கடற்படையினரின் ரோந்துக் கப்பல்களை வரச்செய்து, பின்னர் அவற்றை மூழ்கடிக்கலாம் என்ற நோக்கில், புலிகள் வேண்டுமென்றே இவ் வதந்தியைப் பரப்பியுள்ளனர்.

ஐரிஸ்மோனாக்கப்பல் கைப்பற்றப்பட்டு 12 மணித்தியாலங்கள் கழிந்த பின்னரும், இக்கப்பல் கடத்தப்பட்டுவிட்டது என்று எப்படிப் படையினர் அறியாமல் இருந்தனர்? செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் இக்கப்பல் காரைநகரை வந்தடையவில்லை என்பதை ஏன் கடற்படையினர் அறிவிக்கவில்லை? அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம், மற்றும் கடற்படையினர் உட்பட எவரும், இக்கப்பல் காணாமற்போய்விட்டதன் பின்னர், அக்கப்பல் எங்கே நிற்கின்றது என்று அறிந்துகொள்ளுமுகமாக, ''ஐரிஷ்மோனா'' கப்பல் தலைவனுடன் வானொலித் தொடர்புகளை ஏன் மேற்கொள்ளவில்லை?

அப்படியான செய்தியொன்று அனுப்பப்பட்டிருந்தால், ஐரிஷ்மோனாக் கப்பல் பதிலளிக்காதவிடத்துத் தேடுதல் தொடங்கியிருக்கும்.

பி-463 கப்பல் மூழ்கடிக்கப்பட்ட பின்னர், ஜயசாகரவும் பி-456 கப்பலும் ஐரிஷ்மோனாவைக் கண்டுபிடித்த பின்னரே, கடற்படை கப்பலுக்கு என்ன நேர்ந்தது என்பதைத் தெரிந்து கொண்டது. காரைநகரிலுள்ள கடற்படை விழிப்புடன் இருந்திருக்குமாயின், திருகோணமலையிலிருந்து தீவகப்பகுதிவரையுள்ள ஒவ்வொரு கடற்படைக் கப்பலும் நேரகாலத்துடன் இக்கப்பலைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும். மேலும், பி - 463 கப்பலில் பணியாற்றிய லெப். நளின் விஜயசிங்காவும் மற்றும் பலரும் உயிர் பிழைத்திருப்பர். அத்தோடு, இத்தகையதொரு நிலைமையைக் கையாளும் பொருட்டு, நல்ல திட்டமொன்றை வகுப்பதற்குக் கடற்படையினருக்குப் போதியளவு அவகாசம் இருந்திருக்கும்.

58 பெண்கள், மற்றும் 15 சிறுவர்கள் உட்பட 144 பயணிகளைக் கொண்ட கப்பல் ஒன்று வெறுமனே மறைந்து காணாமல் போகமுடியுமா? ''ஐரிஷ்மோனா'' கடத்தப்படாமல், இருள் சூழ்ந்த வேளையில் கற்பாறை ஒன்றுடன் மோதி கடலில் மூழ்கியிருந்தாற்கூட, இக்கப்பல் வந்துசேரவில்லை என்

பதைக் கடற்படை அவதானிக்காமல் இருந்தவேளையில் இப் பயணிகளை யார் மீட்டிருப்பர்?

கப்பலில் பிரயாணஞ்செய்த பயணிகளின் எண்ணிக்கை கூடச் சரியாகத் தெரியவில்லை. கப்பலில் பயணஞ்செய்வதற் காக வழங்கப்பட்ட பயணச் சீட்டுக்களின் எண்ணிக்கை 121 ஆகும். ஆனால், தாய்மார்களின் பயணச் சீட்டுக்களில் சிறுவர் கள் பிரயாணம் செய்தமையால், வியாழக்கிழமை வரையிலும், 15 சிறுவர்கள் கப்பலில் இருந்தார்கள் என்பது தெரியவர வில்லை.

படையினர் மற்றும் வான்படையினரின் உதவியின்றி, கடற் படை, கடற்புலிகளுடன் தனித்துநின்று போராடவேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது? வான்படையின் வானூர்திகள் ஒரு தடவையேனும் கடற்புலிகளின் படகுகளைத் தாக்கவில்லை. பதிலாக, தாங்கள் வீசும் குண்டுகளுள் ஒன்றாவது சூசை அவர் களைக் கொல்லும் என்ற நம்பிக்கையில், அவர்கள் எவ்விதப் பயனுமின்றிக் கடற்கரைமீது குண்டுகளை வீசினர்.

கடற்புலிகளின் பதினைந்து படகுகள் பட்டப்பகலில் சுற்றிக் கொண்டிருந்த வேளையில், விடுதலைப் புலிகளின் ஏவுகணைக் குப் பயந்து வான்படையினர் படகுகள் மீது எதுவிதத் தாக்கு தல்களையும் தொடுக்கவில்லை.

பி - 463 கப்பல் ஐரிஷ்மோனாவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னால், வான்படையினர் அது தரித்து நின்ற இடத்தை யும் அதனையும் கண்டுகொள்ளாமல் இருந்ததும் வியப்புக்குரிய விடயமாகும். அதேவேளை, அவர்கள் ஐரிஷ்மோனாவைக் கண்டுபிடித்திருந்தால், பி - 463 கப்பலைச் சேர்ந்த கடற்படை யினர் நிச்சயமாக மரணங்களைத் தழுவியிருக்கமாட்டார்கள். ஆனால், அப்பொறியில் சிக்கிக்கொள்வதற்கு முன்னர் அவர் களுக்கு முன்னெச்சரிக்கை வழங்கப்பட்டிருந்திருக்கும்.

தங்கள்மீது ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று வான்படையைச் சேர்ந்த வானூர்தி ஓட்டிகள் கூறு வதன் அர்த்தம் என்ன என்பது இப்பொழுது புலப்படுகின்றது. ஏப்ரல் மாதத்திலிருந்து, பட்டப்பகலில் நடைபெறுகின்ற ஒவ்வொரு போரின்போதும், தம்மீது ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாக இலங்கை வான்படையைச் சேர்ந்த ஓட்டிகள் கூறியுள்ளனர். அதனால், இந்த ஓட்டிகளுக்குப் பைத் தியம் பிடித்திருக்கவேண்டும்; அல்லது அவர்கள் ஆபத்தை எதிர் நோக்கும் விருப்பம் இல்லாதவர்களாக இருக்கவேண்டும் என, படையினரும் கடற்படையும் சந்தேகிக்கின்றனர்.

தாங்கள் குண்டுவீசி இரண்டு ஏவுகணைத் தளங்களை நிர்மூலமாக்கி உள்ளனர் என வான்படையினர் கூறுவதும்கூட, சந்தேகத்திற்கு இடமானதாகும். புலனாய்வுப் பிரிவினர் வானொலியை அவதானித்து வந்தபோதும், இப்படி ஒன்று இடம்பெற்றதாகத் தெரியவில்லை. வானூர்தி ஓட்டிகள் தவிர, வேறு எவரும் ஏவுகணைத்தளம் சேதமடைந்திருப்பது பற்றிக் கூறவில்லை.

பத்தாண்டுகளுக்கு மேலாக இலங்கை வான்படையின் பீரங்கி மேடைகளில் முக்கியத்துவம் பெற்றிருந்த 'பெல் 212' ரக உலங்குவானூர்தியும் சியாமாசெட்டி வானூர்தியும், தரையிலக்கு நோக்கித் தாக்குதலை நடத்துவதற்கு இப்போது அதிகளவில் பயன்படுத்தப்படுவதில்லை. ஏவுகணைகளுக்கு இலகுவில் இலக்காகக்கூடிய 'பெல் 212' ரக உலங்குவானூர்திகள், தரையில் இருந்து துப்பாக்கிகளினாலும் சுட்டுவீழ்த்தப்படக்கூடியனவாகும். அந்தத் தேவைக்காக, விடுதலைப் புலிகளிடம் ஏராளமான 50 கலிபர் துப்பாக்கிகள் இருக்கின்றன என்பது தெரியவந்துள்ளது.

போக்குவரத்து வானூர்திகளாக மாற்றப்பட்டுள்ள 'பெல் 212' ரக உலங்குவானூர்திகள், போர்க்களத்தில் புலிகள் உட்பட ஒருவரையும் ஏமாற்ற மாட்டாதவை. செவ்வாயன்று அப்பகுதியில் பல உலங்குவானூர்திகள் பறந்து சென்றபோதிலும், கடற்கரையில் உள்ள புலிகளின் நிலையையோ, அன்றி கடற் புலிகளின் படகுகளையோ தாக்க முற்படவில்லை.

படைத் தளபதியின் நடவடிக்கை, குழப்பமுறச் செய்வதுடன், கோழைத்தனம் மிக்கதுமாகும்.

நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்குள் படைமுகாம் ஒன்று இருந்த போதிலும், படையினர் ஏன் ஐரிஷ்மோனா நின்ற கரையை நோக்கி முன்னேறும்பொருட்டுத் தீவிர நடவடிக்கையில் ஈடுபடவில்லை? பயனற்ற வகையில் எறிகணை வீசியதைத் தவிர, படையினர் எதுவும் செய்யாமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தனர் போன்று தெரிகிறது.

கடற்கரையை நோக்கிப் படையினர் நகர்ந்திருந்தால், அது புலிகளைக் காடுகளுக்குள் தப்பியோட நிர்ப்பந்தித்திருக்கும்; அல்லது பட்டப்பகலில் ஒரே நேரத்தில் தரையிலும் கடலிலும் ஆபத்தான போரில் ஈடுபடவைத்திருக்கும்.

கப்பல் நங்கூரமிட்டிருந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள கடற்கரையைத் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவருவதன் மூலம், படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்திருக்க முடியும். அப்போது, விடுதலைப் புலிகளின் போர் டாங்கி அவ்

விடத்தை விட்டு நகர்ந்திருக்கும்; அல்லது தரையில் நின்ற படையினரால் தாக்கப்பட்டிருக்கும்.

அவ்விடத்தை விட்டு டாங்கி போயிருக்குமாயின், 'பி-456' கப்பல் அழிக்கப்பட்டிருக்க மாட்டாது.

இத்தகைய, முன்னேறும் முயற்சிக்குத் தேவையானளவு முன்னணிப் படையினர் முல்லைத்தீவு முகாமில் இல்லாதிருந்தாலுங்கூட, நடமாடும் படைப்பிரிவு போன்ற, அல்லது சிறப்புப் படையணிபோன்ற திடீர் படைகளைக் கொண்டுவருவதற்குப் போதியளவு பகல்நேரப்பொழுது இருந்தது. வானூர்தி மூலம் இப்படைப் பிரிவைக் கொண்டுவருவதற்கு அரைமணித்தியாலம்கூட எடுக்கமாட்டாது.

கடற்கரையில் போர் டாங்கி ஒன்றைத் தாம்கண்டதாகப் படையினர் கூறியபின்னருங்கூட, அதைத் தாக்குவதற்குப் படைகள் செல்லவில்லை. அந்த டாங்கி, பூநகரியிலுள்ள படையினரிடமிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாக இருக்கலாம்.

ஏன் இத்தகைய தாக்குதல் ஒன்றுக்கான ஏற்பாடுகளை அனைத்து நடவடிக்கைகளுக்குமான தளபதி-மேஜர் ஜெனரல் றோகான் தலுவத்தை மேற்கொள்ளவில்லை? கடற்படை, திருகோணமலையில் இருந்து தனது தாக்குதல் நடவடிக்கைகளை நெறிப்படுத்திக்கொண்டிருந்தபோது இவரும் அங்கு இருந்தார். ஆகையால், போர் பற்றித் தேவையான தகவல்களை இவரால் பெற்றுக்கொள்ள முடிந்தது. இருந்தும், அநுராதபுரத்தில் உள்ள தனது தலைமையகத்திற்குச் செவ்வாயன்று காலை திரும்பிய அவர், தாக்குதல் நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை.

செவ்வாய்க்கிழமைக்குப் பின்னருங்கூட, படையினர் தாக்குதல் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. வான்படையும் இவ்வாறு நடந்துகொண்டது.

முன்னர் எப்பொழுதும் எழாத ஒரு புதிய நிலைமை மூன்றாவது ஈழப்போரில் எழுந்துள்ளது. அதாவது, முப்படைகள் மத்தியில் ஓர் ஒருங்கிணைப்புக் காணப்படவில்லை.

வான்படை, மற்றும் படையினரின் உதவிகள் எதுவுமின்றி, காவற்படையினர் செவ்வாயன்று தனித்துநின்று போராடினர்.

முப்படையினரும் ஒருவருக்கொருவர் உதவிக்கரங்களை நீட்டாமல், அற்ப சொற்ப விடயங்களுக்காகத் தங்களுக்குள் போராடிக்கொண்டிருப்பார்களானால், அது புலிகள் தங்களது ஈழத்தைப் பெறுவதற்கு போய் முடியும்.

# ஏற்றுக்கொள்ளவேண்டும்; இல்லையேல் அழித்து விடவேண்டும்

—போர்கி விக்கிரமசேகர

*இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்ட தீர்வுத் திட்டம் நீண்டகாலத்தின் பின்னர் அறிவிக்கப்பட்டுள்ளது. திருமதி. சந்திரிகா பண்டார நாயக்காகுமாரதுங்கா "அரசின் ஒரு துணிச்சல் மிக்க முயற்சி" என இத்தீர்வுத்திட்டத்தை வடக்கிலும், தெற்கிலும் உள்ளவர்களும் சர்வதேசச் சமுகத்தவர்களும் வரவேற்றுள்ளனர்.*

'சண்டே ஒப்சேவர்',
20-08-95

இந்த யோசனைகளை, அடிப்படையில் இரண்டு குழுக்கள் எதிர்க்கின்றனர். சிங்களத் தேசியவாதிகள் எனப்படுவோர், இந்தப் பிரச்சினை முழுவதையும் பேரினவாதக் கொள்கையின் அடிப்படையில் நோக்குகின்றனர். புத்திஜீவிகள் என அழைக்கப்படுவோரும், இவர்களும் சிலவேளைகளில் மாயையிலும், மயக்கத்திலும் சிக்குண்டு தவிக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் அவர்கள் கொண்டுள்ள குறுகிய மனப்போக்கு, அவர்களின் அருகாமையில் உள்ள யதார்த்த நிலையையும் புரிந்துகொள்ள முடியாமல் செய்கின்றது.

தாங்கள் ஒரு வீரஞ்செறிந்த இனம். சிறுபான்மையினரும், மற்றைய சமூகத்தவர்களும் தங்களுக்கு அடிமையாக மகிழ்ச்சியுடன் வாழலாம் எனக் கற்பனை செய்தமைபோன்று, சிறீலங்கா சிங்கள இனத்தால்தான் ஆளப்படல் வேண்டும் என அவர்கள் இன்னமும் கனவுகாண்கின்றனர்.

வரலாறு முழுவதும் இந்த நாடு ஓர் அரசனின் கீழும், ஓர் ஆட்சியாளரின் கீழும், ஓர் அரசின் கீழும் இருந்தமை போன்று, அப்பேரினவாதிகள் இலங்கையின் ஐக்கியம்பற்றிப் பேசுகின்றனர். உயர்வான ஒன்று எனத் தாங்கள் நினைக்கும் ஐக்கியத்தைப் பாதுகாக்கப்போவதாகவும் அவர்கள் கூக்குரலிடுகின்றனர். இந்த நாட்டின் ஐக்கியம் பற்றிய இந்தப் பேச்சுக்களின் பின்னணியில் அவர்களின் வீண் தற்பெருமை காணப்படுகின்றது. இந்த வீண் தற்பெருமையானது, எங்களது இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் வகையில் ஆளப்படுவதற்கான, மற்றவர்களோடு சேர்ந்து தாங்கள் தெரிவு செய்த அரசாங்கத்தால் ஆளப்படுவதற்கான, சமத்துவமாக வாழும் உரிமையைக் கொண்டிருக்கின்றனர் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதைத் தடுக்கின்றது. ஏனைய மக்களிலும் பார்க்கச் சிங்களவர்கள் பெரும்பான்மையானவர்களாக இருப்பதால், மற்றவர்களை ஆளுவதற்கான உரிமை தங்களுக்கு இருக்கின்றமை போன்று, சிங்களவர்கள் மற்றவர்களை ஆளவேண்டும் என இந்த மாவீரர்கள் இன்னமும் கனவுகாண்கின்றனர். அதே வேளை, இந்த நாட்டில் வாழ்பவர்கள் அனைவரும் இந்த நாட்டின் எப்பாகத்திலும் வாழவும், தொழில்பார்க்கவும், சாவடையவும் சம உரிமை உடையவர் என்றும், அவர்கள் எப்பொழுதும் போதித்து வருகின்றனர்.

## ஐக்கியப்பட்ட இலங்கை

இந்த நாட்டின் ஒருமைப்பாட்டினை இல்லாமற் செய்வதுடன், கோட்டையின் ஜயவர்த்தனபுரத்திலுள்ள பாராளுமன்றத்தின் இறைமையையும் இத்தீர்வுத்திட்டம் பங்கீடு செய்கின்றது என, அவர்கள் முக்கியமாக எதிர்த்து வருகின்றனர். தேவதைகளின் கற்பைப்போன்று, இந்த நாட்டின் ஐக்கியப்பட்ட பண்பு எவ்விதத்திலும் மீறப்படக்கூடாது என அவர்கள் மதிப்பதுபோல் தோன்றுகின்றது.

ஆனால், இத்தீர்வுத்திட்டம் தொடர்பாக அவர்களின் சரியான நிலைப்பாடு என்ன? எங்கள் நாட்டின் ஐக்கியத்தின்பால் அதிதீவிர அக்கறை கொண்டுள்ள அவர்கள் கூறுவதுபோன்று, இந்த நாட்டினைப் பிரிக்கக்கூடிய தீர்வுத்திட்டம் வேறு ஏதும் உண்டா? எவ்வாறாயினும், ஒற்றையாட்சி நாடு என்றால் என்ன? நாங்கள் அதை விளங்கிக்கொண்ட வகையிலும், இந்த யோசனைகளை நோக்குமிடத்தும், தொடர்ந்து இந்த நாடு ஒரு நாடாகவே, ஐக்கியப்பட்ட நாடாகவே இருக்கும். ஆனால், பிராந்திய அரசைப் பொறுத்தவரையில், இதுவரைகாலமும்

மத்திய அரசிடம் குவிந்திருக்கும் சில அதிகாரங்கள் பிராந்தியங்களுக்கு உரித்தானவகையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இந்த முறைமூலம், ஒவ்வொரு பிராந்தியத்திலுமுள்ள மக்கள் சனநாயக நடைமுறைமூலம், சுதந்திரமாகத் தங்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலம், தங்களது பிராந்தியத்தின் நடவடிக்கைகளை எப்படிச் சிறந்தமுறையில் கையாளலாம் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

பொதுவான நலன்களுடைய விடயங்கள், மற்றும் அனைத்துப் பிராந்தியங்களின் நலன்கள் தொடர்பாக மத்திய அரசினால் கையாளப்படும் விடயங்கள், மற்றும் இந்த அரசை அமைப்பதற்கான விடயங்கள் அனைத்தும் மத்திய அரசினால் கையாளப்படும். அதற்காக, அவ்வதிகாரங்கள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இதுதான், அதன் விபரங்களில் சிக்குண்டு குழப்பமடையாத, அந்த அடிப்படை யோசனைகளின் சாதாரண விளக்கமாகும். ஆகவே எப்படி இந்த ஏற்பாடு நாட்டினது இறைமையை நிலைகுலையச் செய்யும்?

### அதிகாரப் பகிர்வு

ஒரு குறிப்பிட்ட பிரர்ந்தியத்தின் நடவடிக்கையாக இருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும் சரி, பிராந்தியங்கள் அனைத்தினதும் எல்லா நடவடிக்கைகளையும் மத்திய அரசே கையாள வேண்டும் என்று கருதுகின்றவர்கள் மட்டுமே, இறைமையைப் பகிர்வது போன்றதல்லாத இந்த அதிகாரப் பகிர்வு யோசனையை எதிர்ப்பர். வேறு வார்த்தைகளில், அதை வேறு வழியில் கூறுவதானால், யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மாத்தறை மற்றும் திசமகரகம ஆகிய இடங்களில் வாழும் மக்கள் அனைவரினது விடயங்களையும் கொழும்பிலுள்ள அரசே கையாளவேண்டும். அதாவது, அந்த அரசு, இந்த நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்கப் பாடுபடுபவர்களுக்கு, நிச்சயமாகப் பெரும்பான்மைச் சிங்களவரைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்பவர்களே இதை எதிர்ப்பர். இந்த ஏற்பாடும், ஒரு சில ஆண்டுகளிற்கு முன்னர் தமிழர்கள் போதும் போதுமென்று தீர்மானிக்கக்கூடிய கட்டாய நிலையிலிருந்த போது ஏற்கக்கூடியதாயிருக்கும்; அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும்.

சிங்கள மொழி பேசும் மக்களிடையேயுள்ள தீவிரவாதிகள் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையின்கீழ் தனிச் சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்கவேண்டும் என்று

தொடங்கியதுடன், சிறுபான்மையினர்களையும் அடக்கி ஒடுக்கத் தொடங்கினர். சிங்களத்தை அரசகரும மொழியாகவும், தமிழை வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிருவாக மொழியாகவும் ஏற்றுக்கொண்ட பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம் இந்தப் பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்வதையும் அவர்கள் தடுத்தனர். இந்தச் சிங்கள வீரர்கள், இந்த நாட்டில் வாழும் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் சொல்லொணாத் துயரங்களை விளைவித்தனர். அவர்கள் இப்போதும் உயிருடன் இருந்துவருகின்றனர். சிங்களமும், தமிழும் முழு அளவில் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவர்கள் மூச்சுப் பேச்சற்று இருக்கின்றனர். அவர்கள் தங்களது முட்டாள் தனத்தை உணர்ந்துகொள்ள, பல ஆண்டுகள் எடுத்தது. அவர்களின் முட்டாள்தனம் இந்த நாட்டில் பேரழிவுகளை உண்டுபண்ணியுள்ளதுடன், இந்த நாடு இரண்டு பிரிவுகளாகப் பிரிந்துநின்று போர்புரியும் ஒரு சூழ்நிலையையும் தோற்றுவித்துள்ளது. இந்த மனிதர்கள், இந்தச் சூழ்நிலைக்கான யதார்த்தத்தை விளங்கிக்கொள்ள மறுக்கின்றனர். எங்கள் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில், இந்த நாட்டின் இறைமையுள்ள அரசாங்கத்திற்கு எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை என்பதை விளங்கிக்கொள்ள அவர்கள் மறுக்கின்றனர். நாங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இதுதான் உண்மை நிலையாகும்.

## நியாயமான பய உணர்வுகள்

அதிகாரப் பரவலாக்கலின் நடைமுறைபற்றிச் சந்தேகமும், உண்மையில் அச்சமும் கொள்வோர் உள்ளனர். இந்தியாவின் உள்ளமைபோன்று, மத்திய அரசு பிராந்திய அரசுகளைக் கலைப்பதற்கான விதிகள் எதுவும் இன்மையால், இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டம் நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச்செல்லுமா? என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இந்த விடயங்கள் இலகுவாகக் கையாளப்படுவதோடு, அரசு இந்த நியாயமான சந்தேகங்கள், அச்சங்களைக் கவனத்தில் எடுத்து, அவற்றைப் போக்குவதற்கான விதிகளைக் கொண்டுவரல்வேண்டும்.

தெற்கிலிருந்து வரும் எதிர்ப்புக்கு இவ்வளவும் செய்யவேண்டும். கடந்த தேர்தலின்போது மக்களால், அவர்களின் இனவாதத்துடன் தூக்கி எறியப்பட்ட அரசியல் வங்குரோத்துக்காரர்களால் இந்தத் தீரர்கள்கூட ஆதரிக்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இப்போது இந்தத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்துள்ளனர். இந்த நிராகரிப்பு ஆச்சரியப் படக்கூடியதல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஏற்கனவே அதைக் கொழும்பில் தெரிவித்துள்ளனர். எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் இத்தீர்வுத்திட்டத்தினை நிராகரிப்பார்கள் என எதிர் பார்க்கப்பட்டாலும், இதை நடைமுறைப்படுத்தத் தொடங்குமுன், கவனமாகச் சிந்திக்கப்பட வேண்டிய, கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டிய முக்கிய விடயங்கள் பல எழுகின்றன

விடுதலைப் புலிகள், உண்மையில் இந்த அதிகாரப்பரவலாக்கலின் அடிப்படைக் கூறுகளை நிராகரிக்கவில்லை. அவர்களுக்கு எதிரான, வடக்குக் கிழக்கில் உள்ள குழுக்கள் எதனுடனும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதை அவர்கள் நிராகரிக்கின்றனர்போல் தோன்றுகின்றது. தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்களே அன்றி, வேறொருவரும் அல்லர் என்பதே, இவ்வளவு காலமும் அவர்களது நிலைப்பாடாகும். அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் பின்னர் கூறுவதை, முன்னரே கூறும் திருவாளர்கள் குமார் பொன்னம்பலமோ, வசந்தராஜாவோ தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்க முடியாது என அதைக் கூறலாம்.

### உறுதியான ஈடுபாடு

இந்தத் தீர்வுத்திட்டம் அரசாங்கத்தினால் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, இலங்கையின் வடக்குக் கிழக்கிலுள்ள தங்களது தாய்நாட்டில் ஓர் அரசை அமைப்பதற்காகவும், தமிழ் மக்களது சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காகவும், தங்களை உறுதியுடன் ஈடுபடுத்தியிருப்பதைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர்.

முன்னர் கூறியைதுபோன்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாடு எங்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகும். மாகாண சபைகளைப்போன்று, இந்த அதிகாரப் பரவலாக்கலும் வடக்குக் கிழக்கில் நிலவும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு உதவும் என முதலில் எதிர் பார்க்கப்பட்டது. அது இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்காதெனில், இத்தீர்வுத்திட்டத்தில் எதிர்பார்ப்பதுபோன்று, நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு அதிகாரப்பரவலாக்கலைச் செய்ய வேண்டிய தேவை ஏதும் உண்டா? அதேவேளை, அந்த அதிகாரப்பரவலாக்கலை அதனது எல்லாக் கட்டுப்பாடுகளுடனும்

இந்த நேரத்தில் நடைமுறைப்படுத்துவதால் பயன் ஏதும் உண்டா? அது இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைத்துப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து, இந்த நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவராவிடின், வேறு ஏதாவது உண்டா? மேலும், அது வேறு என்ன வகையில் உதவப்போகின்றது?

## நாட்டு நிலைமை
## இன்றைய அவசர தேவை என்ன?

இந்த அர்த்தமற்ற போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய தேவை எங்களுக்குண்டு. எனவே, போரிட்டுக்கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதன் மூலம் போரை முடிவுக்குக்கொண்டுவரமுடியும். அது முடியாவிடின், இந்த அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை ஏற்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளை முறியடித்துத் தமிழ் மக்களை விடுவிக்கவேண்டும். வடக்குக்கு வெளியேயிருந்து இயங்கிவரும் எந்தத் தமிழ்க்குழுவுடனும் செய்து கொள்ளும் எந்த ஏற்பாடும் நடைமுறைச் சாத்தியமற்றதாகவே இருக்க முடியும். இந்த யோசனைகளைத் தனியாக நடைமுறைப்படுத்தினாலும், அவை வடக்கில் காலூன்றமாட்டாது. ஆகவே, இன்று அதிமுக்கியத்துவம்வாய்ந்ததாகவுள்ளது, வடக்குக் கிழக்கிலுள்ள மக்களை அணுகுவதற்கான ஒரு வழியைக் கண்டு பிடிப்பதாகும். அதனை விடுதலைப் புலிகளைக்கொண்டு செய்துகொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள், தங்களை நம்பமுடியாதவர்கள்; எதற்கும் விட்டுக்கொடுக்க முடியாதவர்கள் என்பதை நிலைநிறுத்தியுள்ளார்கள். மற்றைய குழுக்களைக்கொண்டும் அதைச் செய்ய முடியாது. ஏனெனில், வடக்குக் கிழக்கில் எந்தத் தகுதியும் அவர்களுக்குக் கிடையாது. இந்த நிலையில், நாங்கள் என்ன செய்யமுடியும்? தமிழீழ விடுதலைப் புலிகளின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதால், நாங்கள், அவர்களின் எந்தக் கோரிக்கையையும் நிராகரிப்பதா? அப்படியானால், நீண்டகாலமாக நடைபெற்றுவரும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு மாற்று வழிகள் எதுவும் கிடையாது. எனவே, அது ஓர் அழிவுப் போராகவே இருக்கும்.

நாட்டின் நிலைமை எதனை வெளிப்படுத்துகின்றது? நாங்கள் விரும்பினாலென்ன? விரும்பாவிட்டாலென்ன? வடபகுதியும், கிழக்கில் சில பகுதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளன. இப்பகுதிகளில் இயல்புநிலை கிட்டத்

கூட இல்லை. பெயரளவில் மட்டும் ஐக்கியப்பட்ட நாடாகக் காணப்படுகின்றதே தவிர, எங்கள் நாடு பிளவுபட்டுள்ளது. நாங்கள் அங்கீகரிக்காவிட்டாலுங்கூட, வடக்கிலுள்ள மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப விரும்பினால், தமிழீழ விடுதலைப் புலிகள் அதற்கு அனுமதி வழங்குகின்றார்கள். சிறீலங்கா அரசினால் சம்பளம் வழங்கப்படும் அரச அதிபர்களும், மற்றும் மேலாளர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்தே பணிப்புரைகளைப் பெறுகின்றனர். மருத்துவமனைகளும் மற்றும் நிறுவனங்களும் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. அல்லது அவர்களுக்காகவே நடத்தப்பட்டு வருகின்றன. நடைமுறையில் அவர்களே இந்தப் பகுதிகளில் ஆட்சியாளர்களாவர்.

இந்த நிலையை நாங்கள் எப்படி மாற்ற முடியும்? போரில் ஏதோ ஒரு நாளில் விடுதலைப் புலிகளை வெல்வதா இதற்கான ஒரே பதில்? மனித உயிர் அழிவுகளையும், பணச்செலவையும் ஏற்படுத்தும் அப்படியான முயற்சி பயனுடையதா? போர் எங்களை மேலும் அழிப்பதற்குமுன், விரைவாக இவற்றுக்கு நாம் பதில் கண்டுபிடிக்கவேண்டும்.

ஒரேயொரு தீர்வினை மட்டும் காணமுடின்கிறது. அத்தீர்வு விரும்பத்தகாததாக இருந்தாலும், அது ம டுமே தீர்வாகத் தோன்றுகிறது. நாங்கள் யதார்த்தத்துடன் இணங்கிப்போக முன்வரவேண்டும். நாட்டின் நிலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக தீர்வுத் திட்டத்தை உத்தியோகப்பூர்வமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிக்க வேண்டும். முடிந்தளவு போர்நிறுத்தத்தைக் கொண்டுவந்து இந்தத் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஓர் இடைக்காலத் தீர்வைக் காண, பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கவேண்டும். அதுவரையும், நாட்டின் ஏனைய பகுதிகளில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தள்ளிப்போடல் வேண்டும். அக்கால இடைவெளிக்குள் நாங்கள் கலந்துரையாடி, அந்தத் தீர்வுத்திட்டத்தை நிறைவுபடுத்திக்கொள்ளமுடியும். இந்த வேண்டுகோளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரிப்பார்களாயின், நாங்கள் முழுமுயற்சி எடுத்தது முன்னுரிமை கொடுத்து, எங்களால் செய்யக்கூடியவற்றையெல்லாம் செய்து, தமிழீழ விடுதலைப் புலிகளை இவ்வுலகைவிட்டு அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

# வேலூர் விபரீதம்

*சென்னையிலிருந்து மேற்கே 150 கிலோ மீற்றர் தூரத்தில் சுறுசுறுப்பான வர்த்தகப் பட்டினமான வேலூர் இருக்கின்றது. 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையும் இங்கிருக்கின்றன. அதனால் அப்பட்டினம் தென்னாசியா எங்கும் புகழ்பெற்று விளங்குகின்றது. அதுமட்டுமல்ல கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக அங்கு இடம் பெற்றுவந்த வரலாற்றுச்சம்பவங்களும் அது பலரறியும் பட்டினமாக இருப்பதற்குக் காரணம். அங்குள்ள அழகான அசைக்க முடியாத வேலூர்க் கோட்டை பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளுடன் தொடர்புடையது.*

**புலிகள் மீண்டும் தமிழகக்காவல் துறையினரின் கண்களைக் கட்டியுள்ளனர்.**

சண்டே ரைம்ஸ் 3-9-95
*கிருஸ்ணமூர்த்தீ*

புரண்ட்லைன் 8-9-95
T. S. *சுப்பிரமணியம்*

லங்கா காடியன் 15-9-95
*நிருபமா சுப்பிரமணியம்*

**தெ**ன்னிந்தியாவின் படைக்கட்டிடக் கலைக்கு முன்மாதிரியாகச் சிறந்து விளங்குகின்றவற்றில் ஒன்றென வரலாற்றாசிரியர்களால் வர்ணிக்கப்படுகின்ற அக்கோட்டை 1274 ஆம் ஆண்டில் விஜயநகரப் பேரரசின் தளபதியான பொம்மிரெட்டி

யினால் முதன் முதலில் கட்டப்பட்டது. அது பின்னர் 17ஆம் நூற்றாண்டில் இப்போதிருக்கும் வடிவத்தில் கட்டிமுடித்திருக் கப்படல்வேண்டும். பிரித்தானியர்களும், கர்நாடகத்திலிருந்த நவாப்புக்களும் இக்கோட்டையில் மேலதிகக் கட்டிடங்களைக் கட்டியுள்ளனர். அக்கோட்டையிலுள்ள ஜலகங்கேஸ்வரர் கோயில் அதற்கு கலையழகூட்டுகிறது. தென்னாட்டில் தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்காகக் காலத்திற்குக் காலம் மராட்டியர்களும், டில்லியிலிருந்த மொகலாயர்களும், பிரித் தானியர்களும், ஆர்க்காட்டு நவாப்பும், கர்நாடகத்தின் நவாப் பும் அக்கோட்டையைக் கைப்பற்றியுள்ளனர்.

18ஆம் நூற்றாண்டில் பிரித்தானியருக்கு எதிராகப் போர்புரிந்த கைதர் அலி (Hyder Ali) வேலூர்வரை ஆட்சி செய்தான். ஆனால் அவன் அக்கோட்டையைத் தன்வசம் வைத்திருந்தானா என்பது தெரியவில்லை. அக்கோட்டை 1791 ஆம் ஆண்டில் பிரித்தானியரின் ஒரு தளமாகியது. அங் கிருந்தவாறே பிரித்தானியர் 200 கிலோ மீற்றர்களுக்கப்பாலி ருந்த பங்களூர்மீது படையெடுத்தனர். அப்போது பங்களூர் திப்புசுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. 1799 ஆம் ஆண்டில் திப்புசுல்தான் பிரித்தானியரிடம் தோல்வியடைந்த தைத் தொடர்ந்து அவனது பரம்பரை அரசுரிமை இழந்தது. அப்போது அவனது குடும்பமும், ஆதரவாளர்களும் அக்கோட் டையிலேயே சிறைவைக்கப்பட்டனர். அக்கோட்டையின் பல மான அமைப்பு அதைச் சிறைவைப்பதற்கு ஏற்ற இடமாக் கியது,

திப்புசுல்தானின் குடும்பத்தையும், ஆதரவாளர்களையும் அக்கோட்டையில் சிறைவைத்தது 1806 ஆம் ஆண்டில் பிரித் தானியருக்குப் பெரும் சிக்கலாக இருந்தது. அப்போது பிரித் தானியரின் படைத் தளபதி சேர் ஜோன் கிறடொக் (SIR JOHN CRADDOGK) பிறப்பித்த பிரகடனத்தினால் ஒரு கலகம் தோன்றியது. அதைப் பயன்படுத்திய சுல்தானின் மக்களில் ஒருவரான பூட்டோ கைதர் (BHUTTO HYDER) கலகக்காரர் களுக்குத் தலைமை வகித்தான். அவன் 1806 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் நாளன்று கலகத்தின்போது அதிகளவு பிரித்தானியரைக் கொன்று அவர்களை வேலூர்க் கோட்டை யினின்றும் துரத்தினான். இந்தக் கொலையின்போது வேலூர்க் கோட்டைத் தளபதியான கேணல் பான்கோட் (COL. FAN- COURT) டும் கொல்லப்பட்டான். அதன் பின்னர் புலிகளின் வரியைக்கொண்ட மைசூரின் கொடி ஏற்றப்பட்டு பூட்டோ கைதர் மைசூரின் மன்னனாகப் பிரகடனப்படுத்திக்கொண்டான். இதுதான் தேசியவாதிகளால்" முதலாவது இந்தியச் சுதந்திரப்

போர்'' என அழைக்கப்பட்ட 1857 ஆம் ஆண்டில் நடைபெற்ற பெரும் இந்திய ஆட்சியெதிர்ப்புக் கிளர்ச்சிக்கு முன்னோடியான 1806 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியாகும். அதுவும் இக்கோட்டையிலேயே இடம்பெற்றது.

பிரித்தானியர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து வேலூரிலிருந்து 14 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ராப்பேணிட்டையிலிருந்து பிரித்தானிய உதவிப்படை வந்தது. அது வந்த அன்றே கலகம் செய்த சுதேசிப்படையினர் 1500 பேரில் 800 பேரைக் கொலை செய்தது; 600 பேர் கைதுசெய்யப்பட்டார்கள். திப்புசுல்தானின் மக்கள் கல்கத்தாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இதைத்தொடர்ந்து குடியேற்ற நாட்டு ஆட்சியாளருக்கு முன்னர் இலங்கையைக்கடைசியாக ஆட்சி புரிந்த கண்டி மன்னனான சிறி விக்கிரமராசசிங்கன் அக்கோட்டையில் பிரித்தானியரால் சிறைவைக்கப்பட்டான். அதன் பின்னர் காவல்துறைபினர் பயிற்சி நிலையமாக மாறிய அதில் 1990 ஆம் ஆண்டிலிருந்து விடுதலைப் புலிகள் தடுத்துவைக்கப்பட்ட பின்னர் சிறிது கவனத்தை ஈர்த்த அக்கோட்டை 1995 ஆம் ஆண்டு புலிகள் அதிலிருந்து தப்பியோடியதைத் தொடர்ந்து உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

புகழ் உச்சமடைந்திருந்த நேரம் அவரது அரசு தமிழ் நாட்டை ''ஆயுதப் பண்பாட்டிலிருந்து அமைதிப்பூங்காவாக்கியிருந்தது''. சுதந்திரதிர தினத்தன்று தமிழ் நாட்டின் முதலமைச்சர், அரசின் இருப்பிடமான சென்னையில் உள்ள சென்ற். ஜோர்ஜ் (ST. GEORGH) கோட்டையில் சொற்பொழிவாற்றும்போது அப்படிக் கூறியிருந்தார். ஆனால் அன்று காலை சென்னையிலிருந்து 150 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இன்னொரு கோட்டையான வேலூர்க் கோட்டையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ஒரு குழுவினர் தடுப்புக்காவலில் இருந்து மாநிலத்தின் தலைநகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். நான்கு பெண்கள் உட்பட 43 தீவிரவாதிகள் பாதுகாப்பு மிக்க அந்தக் கோட்டையிலுள்ள திப்பு மாளிகை முகாமிலிருந்து தப்பிச்சென்றனர். 153 அடி நீளமான சுரங்கமொன்றைக் குடைந்தெடுத்த அவர்கள் கயிற்றின் மூலம் சுவரைத்தாண்டி, 200 அடி அகலமான நீர் நிரம்பியுள்ள அகழியை நீந்திக் கடந்து தப்பிச்சென்றுள்ளனர்.

1991ஆம் ஆண்டு மே மாதம் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். அதன் பின்னர் தமிழ் நாட்டிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை முற்றாக இல்லாது செய்வ

தாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உறுதிபூண்டிருந்தது. இந்தத் துணிகரத் தப்புதல் நடவடிக்கை நிச்சயம் அந்த அரசிற்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். இதற்கு முன்னரும் ஒன்பது தீவிரவாதிகள் பெப்ரவரி மாதம் 27 ஆம் நாளன்று பெரும் பாதுகாப்புள்ள சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தக் கடைசிச் சம்பவம் பற்றி ஜெயலலிதா வெளிப்படையாக எதிர் நடவடிக்கை எதையும் எடுக்காவிட்டாலும், அவரது அரசு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ரி. என். சிங்காரவேலு அவர்களை அதுபற்றி நீதி விசாரணை ஒன்றை நடத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

அவர்கள் தப்பிச்சென்ற செய்தி ஒரு எதிர்பாராத சூழ்நிலையில் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாளன்று காலை தெரியவந்தது. இந்தச் சிறையுடைப்பிற்குச் சூத்திரதாரிகள் எனக் கூறப்படும் குணசீலனும், சங்கரும் சென்னையை வந்தடைந்திருந்தனர். அவர்களிருவரும் காலை 4.00 மணியளவில் தியாகராய நகரூடே ஈருருளி இழுப்புவண்டியில் செல்லும்போது சோதனைக்கடமையில் ஈடுபட்டிருந்த இரண்டு காவற்துறையினரால் நிறுத்தப்பட்டனர். சங்கர் உடனடியாகச் சயனைட்டை விழுங்கினார். அவரைச் சோதனை செய்தபோது வேலூரில் இருந்து சென்னைக்கு வந்திருந்ததற்கான பேரூந்துச் சீட்டுக் காணப்பட்டது. அவரது மேலங்கியும் வேலூரில் தைக்கப்பட்டிருந்தது. காவல் துறையினர் குணசீலனை அருகாமையிலிருந்த பாண்படிசார் காவல் நிமனையிலிருந்த தலைமைக் காவலரிடம் ஒப்படைத்துவிட்டு சங்கரிடம் மீண்டும் திரும்பியபோது அவர் சாவடைந்து காணப்பட்டார். அதேவேளை தலைமைக் காவலர் குணசீலனை ஒரு ஆட்டோவில் தேனாம்பேட்டைக்கு அழைத்துச்சென்றார். அப்போது குணசீலன் மறைந்துவிட்டார். தலைமைக் காவலர் பணியிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளார்.

நகரக் காவல்துறை ஆணையாளர் திரு. கே. கே. இராசசேகரன் நாயர், சம்பவம் நடைபெற்ற இடத்தை விரைவில் அடைந்தார். காவல்துறையினர் வேலூருடன் தொடர்பு கொண்டனர். அப்போதுதான் தீவிரவாதிகள் தப்பி ஓடிய விடயம் தெரியவந்தது. உடனடியாக மாநிலமெங்கும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

சிறையிலிருந்து தப்பிச்சென்ற இன்னும் 11 பேருக்கு அன்று காலை நன்றாக அமையவில்லை. சென்னையை அடைந்திருந்த அவர்கள் மதுரைக்குச் செல்வதற்காக எக்மோர் (Ehkmoer)

புகையிரத நிலையத்தில் பயணச்சீட்டு வாங்கியிருந்தார்கள். காலை 10 . 40 மணியளவில் அவர்களில் 10 பேர் ஒரு மேசை மீதிருந்தவாறு கதைத்துக்கொண்டிருந்தனர். அவ்வேளை ஒரு புகையிரத நிலையச் சிற்றூழியர் அவர்களைத் தாண்டிச் சென்றார். அவர்கள் பேசிய யாழ்ப்பாணத் தமிழ், அந்த ஊழியரை எச்சரிக்கை அடையச் செய்தது. அவர், அவர்களுடன் பேசிய போது அவர்கள் தங்களிடமிருந்து பயணச் சீட்டைக் காட்டினர். அதேவேளை புகையிரத நிலையத்தைச் சேர்ந்த ஏனைய பணி ஆட்கள் தீவிரவாதிகளைச் சூழ்ந்துகொண்டனர். அவர்கள் தீவிரவாதிகளது பயணப் பைகளைச் சோதனையிட முயன்ற போது அவர்களில் ஒருவரான ராசன் தீவிரவாதிகளுக்குச் சயனைட் வில்லைகளைக் கொடுத்தார். ராசனும் சில சயனைட் வில்லைகளை உட்கொண்டு சாவடைந்தார். அவர்களில் இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஏனைய ஏழு பேரும் அந்தப் பணியாட்களின் கைகளைக் கடித்துவிட்டு தப்பியோட முயன்றனராயினும் அது அவர்களால் முடியவில்லை.

அவர்களுக்கு உணவு வாங்குவதற்காக சங்கர் என்பவர் வெளியே சென்றிருந்தார். என்ன நடந்துள்ளதென்பதை அறிந்து கொண்ட அவர் ஓடிவிட்டார். மாமல்லபுரத்துக்குச் செல்லும் வழியிலுள்ள கீழை மேட்டிலிருக்கும் அகதிகள் முகாமுக்குச் செல்வதற்கு முயன்றாராயினும் அவர் வழியில் பிடிபட்டார். நாங்கள் இராமேஸ்வரம் சென்று அங்கிருந்து கடல்வழிமூலம் யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்குப் பல குழுக்களாகப் பிரிந்ததாக அவர் கூறினார். ''தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் இணைந்து சிறீலங்காப் படைகளுக்கு எதிராகப் போராடவேண்டும் என மிகவும் உந்தப்பட்டதால்'' தாங்கள் தடுப்புக் காவலிலிருந்து தப்பியதாக அவர் கூறினார். இராமேஸ்வரத்துக்குச் செல்வதற்கு அவரது குழு சென்னைக்கு வந்ததாயினும் அந்தப் புகையிரதத்தைத் அது தவறவிட்டுவிட்டது. அதனால் இராமேஸ்வரத்துக்குச் செல்வதற்காக அவர்கள் மதுரைக்குப் பயணச்சீட்டை வாங்கியிருந்தனர்.

ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாளன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் கீரமங்கலம் அருகே தடைபோட்டுச் சோதனை செய்தபோது சுந்தர் என்பவர் கைதுசெய்யப்பட்டார். எனினும் இருவர் தப்பிச் சென்றுவிட்டனர்.

தமிழ் நாட்டிலுள்ள தனியான முகாம்களிலிருந்தும் சிறைச் சாலைகளிலிமிருந்தும் ஒன்பது தடவைகள் புலிகள் தப்பிச்சென்றுள்ளனர். அவைகளில் கடைசியாகத் தப்பிச் சென்றமை மிக

வும் தந்திரமாகத் திட்டமிடப்பட்டும் நடைமுறைப்படுத்தப் பட்டுமுள்ளது. நீதி விசாரணையைக் காரணம் காட்டிய காவல் துறையினர் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாளன்று சுரங்கத்தைப் பார்வையிடுவதற்குச் செய்தியாளர்களை அனுமதிக்கவில்லை. இது அப்படியான ஒரு பாதையைத் தோண்டுவதற்கான திட்டம் பற்றித் தடுமாறச் செய்வதுடன் இந்தச் சுரங்கம் பற்றிய சந்தேகத்தையும் எழுப்புகிறது. இந்தச் சுரங்கத்தை அகழ்வதற்கு எங்கிருந்து தீவிரவாதிகள் ஆயுதங்களைப் பெற்றனர்? பல வாகன அளவுகொண்ட, தோண்டப்பட்ட மணலை அவர்கள் எங்கே கொட்டினர்? சுரங்கம் தோண்டப்பட்டது எப்படிக் கண்டுபிடிக்கமுடியாததாயிருந்தது.

ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாளன்று செய்தியாளர்களை திப்பு மாளிகைக்கு அழைத்துச்சென்ற காவல்துறைப் பணிப் பாளர் நாயகம் திரு. வி. வைகுந் அவர்களும் மேலதிக காவல்துறைப் பணிப்பாளர் நாயகம் திரு. ஐ. தேவாரம் அவர்களும் தீவிரவாதிகள் அதை எப்படிச் செய்தனர் என் பதை விளக்கினார்.

முகாமிலிருந்து கோட்டைச் சுவர்கள்வரை செல்லும் சுரங்கம் மூன்று அடி அகலமும், மூன்று அடி ஆழமும் 80 அடி நீளமும் கொண்டது. பின்னர் அது ஆறு அடி அகலமாகி மீண்டும் மூன்றடியாக ஒடுக்கமுறுகிறது. இதைச் செய்துமுடிக்க நான்கு மாதங்கள்தரை சென்றிருக்கும்.

அந்தச் சுரங்கம் எங்கு செல்லும் என்பதைத் தெரிந்துகொள்ளாமலே தீவிரவாதிகள் அதைத் தோண்டியுள்ளனர், 153 அடி நீளமான சுரங்கத்தை வெட்டிய பின்னர் அவர்கள் சுவரின் திடமான அத்திவாரத்தை எதிர்கொண்டுள்ளனர். அதன் பின்னர் அவர்கள் தளத்தின் மேற்பரப்பு நோக்கி வெட்டியுள்ளனர். வெளியேறும் இடத்தை அவர்கள் மரக்கதவுகள், சலாகைகள் மற்றும் புற்களால் மறைத்துள்ளனர்.

அலவாங்கு போன்று செய்யப்பட்ட குழாய்களைக்கொண்டு சுரங்கம் தோண்டப்பட்டுள்ளது. மண்ணை அள்ளி எடுப்பதற்கு உண்ணும் உருக்குக் கோப்பைகள் பாவிக்கப்பட்டுள்ளன. வெளியேறும் இடத்தில் குழாய்களும், தட்டுக்களும், கதவுகளும், சலாகைகளும் காணப்பட்டன. சுரங்கம் தோண்டுவதற்கு எவ்வித ஆயுதங்களும் வெளியிலிருந்து கொண்டுவரப்படவில்லை என வைகுந்த் கூறினார்.

சுரங்கத்தினூடாகத் தவழ்ந்து சென்ற பின்னர் சுவருக்கு அருகாமையில் உள்ள வெளியேறும் பகுதியூடாகத் தீவிரவாதிகள் வெளியே வந்துள்ளனர். அவர்கள் சுவர்மீதிருந்த ஒரு கல்லின் மீது கயிற்றைக் கட்டி அதன் மூலம் வெளியேறி அகழியூடாக நீந்திச் சென்றுள்ளனர். கரையை அடைந்ததும் உடையை மாற்றிக்கொண்டு ஓடியுள்ளனர். செய்தியாளர்கள் சென்றபோது கயிறு சுவரின் மீது தொங்கிக்கொண்டிருந்தது.

திப்பு மாளிகை அடித்தளத்திலும், 1ஆம் மாடியிலும் 116 அறைகளைக் கொண்ட சற்சதுரக் கட்டிடமாகும். இவைகளில் எந்த அறையிலும் தீவிரவாதிகள் தங்க முடியும். முற்றத்தில் சில மரங்கள் காணப்படுகின்றன. அத்துடன் தூண்கள் கொண்ட மண்டபம் ஒன்றும் காணப்படுகின்றது. சிலவேளைகளில் தென்றலை அனுபவித்துக்கொண்டு தீவிரவாதிகள் அந்த மண்டபத்தில் படுத்துறங்குவர். தப்பியோடுவதற்கு விரும்பாத 34தீவிரவாதிகளின் பாய்களும், தலையணைகளும் அந்த மண்டபத்தில் காணப்பட்டன. திப்பு மாளிகைக்குச் செல்வதற்கு ஒருவர் இரும்பினாலான மூன்று கதவுகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். முதலாவது வாசலின் எதிரேயுள்ள பதுங்குகுழியில் இலகு இயந்திரத் துப்பாக்கிகளை ஏந்திய தமிழ்நாடு சிறப்புக் காவல்துறையினர் கர்வல் புரிகின்றனர்.

சென்னையில் 1990ஆம் ஆண்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (E.P.R.L.F) தலைவர் திரு. பத்மநாபாவும் மற்றும் 13பேரும் கொலை செய்யப்பட்ட பின்னர் 77 தமிழீழ விடுதலைப் புலிகள் திப்பு மாளிகையில் தடுத்துவைக்கப் பட்டனர். அவர்கள் அனுமதியின்றி இந்தியாவுக்குள் வந்தமையால் வெளிநாட்டவர் பதிவுச் சட்டத்தின் 3(2) (ஈ) பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர். இந்தச் சட்டத்தின்கீழ் மாநில அரசு அவர்களைத் தடுத்து வைக்க முடியுமே தவிர இந்தச் சட்டத்தின் 3 (2) (ஜி) பிரிவின்கீழ் அவர்களைக் கைது செய்வதற்கான உரிமை மத்திய அரசுக்கே உண்டு.

''திப்பு மாளிகை'' ஒரு சிறைச்சாலையுமல்ல அல்லது முதன்மையான பாதுகாப்புப் பகுதியுமல்ல என திரு. வைகுந்த் கூறினார். அது தீவிரவாதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு தடுப்பு முகாம். அவர்கள் அதிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அந்த முகாம் வருமான அதிகாரிகளின் கீழ் வருகிறதே தவிர சிறைச்சாலைகளுக்கான காவல்துறை அதிபரின்கீழ் வரவில்லை. தாசில்தார்தான் அதன் தலைவராகும்.

சிறைச்சாலைகளில் உள்ளதுபோன்று அவர்கள் ஒழுங்காக ஒவ்வொரு நாளும் பதியப்படுவதில்லை. சனிக்கிழமைகளில் மாத்திரமே பதியப்படுகின்றனர் எனத் திரு. தேவாரம் கூறினார். அங்கு சிறைச்சாலை அதிகாரிகளோ அல்லது மேற்பார்வையாளர்களோ கிடையாது. தீவிரவாதிகளை அவர்களது வழக்கறிஞர்களும், உறவினர்களும் சந்திக்க முடியும் என மேலும் அவர் கூறினார்.

இந்த முகாமின் பாதுகாப்புக்கு வேலூரில் தலைமையகத்தைக் கொண்டுள்ள வட ஆற்காடு அம்பேத்தூர் மாவட்டத்தின் காவல்துறை அதிகாரியே பொறுப்பானவர். அவர் இப்போது இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாடு சிறப்புக்காவல் படையைச் சேர்ந்த இரு குழுக்கள் அதற்குப் பாதுகாப்பு வழங்கி வந்தன. திப்பு மாளிகையைச் சுற்றியும், அதன் முகட்டைச் சுற்றியும் முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள காவல் கோபுரங்களிலிருந்தவாறு தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் கண்காணித்து வருகின்றனர். வெளியிலிருந்து உணவு கொண்டு வந்து மண்டபத்தில் வைத்துத் தீவிரவாதிகளுக்கு வழங்கப்படுகின்றது.

திப்பு மாளிகையின் அருகாமையிலுள்ள கைதர் மாளிகையில் தீவிரவாதிகளின் உறவினர்கள், பெண்கள் உட்படத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த இரண்டு மாளிகைகளையும் சுவர் பிரிக்கின்றது. இந்த இரண்டு மாளிகைக்குள்ளும் மக்கள் நடமாடுவது தடுக்கப்பட்டுள்ளது. முன்பு ஒரு முறை தப்பிச் செல்வதற்கு முயன்றபோது திப்பு மாளிகையிலிருந்து ஆண் தீவிரவாதிகள் அதன் இடது பக்கத்திலுள்ள மூன்று அறைகளில் ஒன்றின் சுவரை உடைத்து கைதர் மாளிகைக்குள் வர முயன்றுள்ளனர். அது கண்டுபிடிக்கப்பட்டு அந்த அறைகள் இரண்டுக்கும் செல்லும் கதவுகளுக்கு முத்திரையிடப்பட்டது. இந்தக் கதவுகளுக்கு அருகில் மேல்மாடிக்கும் செல்லும் படிகள் உள்ளன.

கதவுகளுக்கு முத்திரையிட்டபோதும் தீவிரவாதிகள் தங்கள் முயற்சியைக் கைவிடவில்லை. அவர்கள் முத்திரையிடப்பட்ட அறையொன்றின் மேலுள்ள முதலாவது மாடியில் ஒரு கல்லை அகற்றி அதன் மூலம் வந்து குளியலறைகளிலிருந்து கழற்றப்பட்ட குழாய்களைக்கொண்டு சுரங்கம் வெட்டும் தங்களது வேலையைத் தொடர்ந்தனர். அந்த அறைகளுக்குச் செல்லும் வழிகளைத் தடைசெய்தது தீவிரவாதிகளுக்குப் பெரிதும் உதவியுள்ளது. ஏனெனில் உள்ளுக்குள் நடப்பது எதையும் மேலதிகாரிகளால் கண்டுகொள்ள முடியாது என்பதைத் திரு. தேவாரம் ஏற்றுக்கொண்டார்.

''முழுநேரமும் திப்பு மாளிகையில் சோம்பேறித்தனமாக இருப்பதுபோன்று காட்டிக்கொண்டு தீவிரவாதிகள் தங்கள் வேலையைத் திட்டமிட்டு ஆறுதலாகச் செய்து முடித்துள்ளனர்'' என இன்னொரு உயர் அதிகாரி கூறினார். ''ஒரு நாளைக்கு ஒரு அடிவரை தோண்டி அந்த மண்ணை மூடியுள்ள அறைக்குள் குவித்துள்ளனர்'' என அவர் மேலும் கூறினார்.

மேல்மாடியிலிருந்து அகற்றப்பட்ட கல்லைக் கண்டுபிடிப்பதைத் தவிர்ப்பதற்குத் தீவிரவாதிகள் ஒரு ஏமாற்றும் வழியைக் கண்டுபிடித்தனர் எனத் திரு. வைகுந்த் கூறினார். மேல்மாடிக்கு அதிகாரிகள் எவராவது வரும் வேளைகளில் அகற்றப்பட்ட கல்லை அந்த இடத்தில் வைத்துவிட்டு மின்னடுப்பை அதன் மேல் வைத்து சமைப்பதுபோன்று நடித்தார்கள் என அவர் கூறினார்.

மின்சாரம் கிடைத்து வந்ததால் தீவிரவாதிகள் இரவு நேரங்களிலும் வேலை செய்தனர். திப்பு மாளிகையின் அத்திவாரம் ஏழு அடி ஆழத்திற்குச் சென்றதால் அவர்கள் முதலில் நிலத்திலிருந்து பத்தடி வரை தோண்டியுள்ளனர். எனத் தகவலறிந்தோர் கூறினர். ஆகஸ்ட் மாதம் 1 ஆம் நாளன்று சுரங்கம் தயார் நிலையிலிருந்தது மணல் திடமாக இருந்தமையால் இந்த வேலையைச் செய்துமுடிப்பதற்கு உதவியது. ஏனெனில் மணல் திடமற்றிருந்தால் அது குகைபோன்று சென்றிருக்கும். அது தீவிரவாதிகளுக்குக் கடினமாகவுமிருந்திருக்கும் எனத் தகவலறிந்த இன்னொருவர் கூறினார். அதைத் தவிர இந்த வேலை தடைப்பட இயற்கையான கற்பாறைகளும் காணப்படவில்லை அத்திவாரத்திலும், கோட்டையின் சுவர்ப்பகுதிகளிலுமே கற்பார் உபயோகிக்கப்பட்டிருந்தது.

153 அடிவரை தோண்டிய பின்னர் தீவிரவாதிகள் சுவரின் அத்திவாரத்தை எதிர்கொண்டனர். எனவே அவர்கள் மேல் நோக்கி வெட்டி, மேற்பகுதியை அடைந்தனர்.

தீவிரவாதிகள் தப்பிச் சென்ற ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் இரவு கடும் மழை இருந்ததோடு, மின்சாரமும் இல்லாதிருந்தது. எனத் திரு. தேவாரம் கூறினார். தீவிரவாதிகளில் 34 பேர் ஏன் தப்பிச்செல்லவில்லை எனக் கேட்டதற்கு, 'அவர்களுக்கு வேண்டிய அளவு உணவும், மற்றைய வசதிகளும் இங்கு இருப்பதால் அவர்கள் தப்பிச்செல்ல விரும்பவில்லை' எனக் கூறினார்,

தீவிரவாதிகள் தப்பிச் சென்றது எதிர்கட்சிகளிடமிருந்து புதிய கோரிக்கைகளை விடச்செய்தது. ஜெயலலிதாவின் அரசை மத்திய அரசு கலைக்கவேண்டுமென இந்திரா காங்கிரஸ் மக்களவையில் கோரியதையிட்டு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதனுடன் மோதிக் கொண்டது. தமிழ் நாட்டை ஆள்வதற்கு ஏற்ற திறமையின்மையால் ஜெயலலிதா பதவி விலகவேண்டும் அல்லது மத்திய அரசு அவரது அரசைக் கலைக்க வேண்டும் என இந்திரா காங்கிரசைச் சேர்ந்த பாரா ளுமன்ற உறுப்பினரான மணி சங்கர் ஐயர் கோரினார். ''அந் தத் தனியான முகாம் விடுமுறை அரங்கு போன்று நடத்தப் பட்டது'' என அவர் குற்றஞ்சுமத்தினார்.

இந்திரா காங்கிரசின் தலைவரான குமரிஆனந்தன், மேலா ளர்கள் ஒத்துழைத்தார்கள் என்றும், மாநில அரசு நிலைமை யைச் சரியாகக் கையாளவில்லை என்றும் குற்றஞ்சுமத்தினார். இந்திரா காங்கிரசிலிருந்து பிரிந்து சென்றோருக்குத் தலைமை வகிக்கும் வாழப்பாடி ராமமூர்த்தி, ஜெயலலிதா தானாகவே பதவி விலகமாட்டாரென்பதால் அவரின் அரசை திரு. நரசிம்ம ராவ் கலைத்துவிட வேண்டும் எனக் கோரினார். தீவிரவாதி கள் தப்பிச்சென்றது ஜெயலலிதாவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இருக்கும் புரிந்துணர்வை உறுதிப்படுத்து கிறது என ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறி னார். ஆனால் இந்திரா காங்கிரசின் பேச்சாளரான திரு. காட் கில், தனது கட்சி மணி சங்கர் ஐயரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாதெனக் கூறினார்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சேர்ந்த பாரரளுமன்ற உறுப்பினர் திரு. ஜனார்த்தனன் இந்த விடயத்தை இந்திரா காங்கிரஸ் அரசியல்மயப்படுத்து கின்றது என அதன்மீது குற்றஞ்சாட்டினார். அத்தோடு தப் பிச் சென்றவர்கள் தீவிரவாதிகள் அல்லர் எனவும் கூறினார்.

மக்களவையில் உள்துறைப் பாதுகாப்பமைச்சர் திரு. ராசேஷ் பைலட் (RAJESH PILOT) அவர்கள் தாக்கல் செய்த அறிக் கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும், மீண்டும் தப் பிச்செல்வது ''நாட்டின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்த லாகவுள்ளது'' என்றும் இப்படி மீண்டும் நடவாமல் மாநில அரசு விழிப்பாகவிருக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்வதாகக் கூறியுள்ளார். வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் தீவிரவாதிகளைச் சிறையில் வைப்பதற்கான அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்குவது பற்றிய கோரிக்கையை மத்திய அரசு மீளாய்வு செய்யும் என்றும் அவர் கூறினார். ''ஆனால் அதற்கு இப்

போதிருக்கும் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துமாறு அவர் மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டின் பல்வேறு முகாம்களிலுமிருக்கும் தீவிரவாதிகள் தங்களை சிறிலங்காவுக்கு அனுப்பும்படி விடுத்திருக்கும் கோரிக்கை பற்றித் தமிழ்நாடு அரசு முன்வைத்த யோசனைகளை மத்திய அரசு ஏன் இழுத்தடிக்கின்றது? ஆண்கள் மட்டும் தடுத்து வைக்கப்பட்டிருந்த திப்பு மாளிகைக்குள் நான்கு பெண் தீவிரவாதிகள் எப்படிச் சென்றனர்? கைதுசெய்யப்பட்ட தீவிரவாதிகளை விசாரிப்பதற்காகப் பாதுகாப்பில் வைத்திருப்பதற்கு மாநிலக் காவல்துறை ஏன் கேட்கவில்லை? தீவிரவாதிகள் நீந்திச் சென்று வெளியேறிய இடத்தின் அருகாமையிலிருந்த காவல் கோபுரத்திலிருந்த காவல்துறையினருக்குக் கேட்கவில்லையா? தீவிரவாதிகள் எங்கிருந்து 'சயினைட்' வில்லைகளைப் பெற்றனர்? இது அவர்களுக்கு திப்பு மாளிகைக்குள் விநியோகிக்கப்பட்டதா? அல்லது அவர்கள் தப்பிச் சென்ற பின்னர் அதைப் பெற்றுக்கொண்டார்களா? அப்படியானால் மாநிலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள்ள தொடர்புகள் இன்னமும் குறைபடாதுள்ளதா? என்ற இக்கேள்விகள் இன்னும் விடை காணப்படமுடியாதனவாகவேயுள்ளன.

---

## O இன்றைய உலகில்...

சுத்தம் சுகம் தரும், கந்தையானாலும் கசக்கிக்கட்டு, கூழானாலும் குளித்துக்குடி என்பது நம் முதுமொழிகள். மக்களின் வாழ்க்கைத்தரத்தை வைத்து உலக சுகாதாரம் நிர்ணயிக்கப்படுகின்றது. 1950 ஆம் ஆண்டு 250 கோடியாக இருந்த உலக மக்கள் தொகை இன்று இரட்டிப்பாகியுள்ளது. 560 கோடியைத் தாண்டியுள்ளது இந்த மாறிவரும் மக்கள் தொகையில் 440 கோடி மக்கள் வளர்ந்துவரும் நாடுகளில் வாழ்ந்துவருகின்றனர்.

உலகமக்கள் தொகையில் 20 விழுக்காட்டினர் கொடூரமான வறுமையினால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். உலகில் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் வாழும் மக்களின் வாழ்வுசராசரி 28 வயதே உதாரணமாக யப்பான், ஆனால் வளர்ச்சி குன்றிய நாடுகளில்வாழும் மக்களின் வாழ்வு சராசரியாக 43 வயதே. உதாரணமாக ருவாண்டா. பொதுவாக உலகநாடுகளின் ஆயுள்நீடிப்பு சிந்திக்கத்தூண்டுகின்றது. உலக மக்கள் தொகையில் பாதிப்பேருக்கு மேல் சாதாரண நோய்களுக்குக்கூட தகுந்த மருத்துவ வசதி கிடைக்காமல் தவிக்கின்றனர்.

# யப்பானியர் கைகளில் போர்க்கைதிகள் பட்ட அவதிகள்

'சண்டே ரைம்ஸ்',
24-09-95

*யப்பானிய முகாம்களில் சிறைவைக்கப்பட்டிருந்த நேசநாடுகளைச்சேர்ந்த போர்க் கதிகளைப் பேட்டிகாண்பதில் பத்தாண்டு களுக்கு மேலான காலத்தைத் திரு. கவன் டோஸ் (Gavan Daws) கழித்துள்ளார். அக்கைதிகள் அனுபவித்த பயங்கரங்கள் பற்றிய நினைவுகளை இங்கு அவர் எழுது கின்றார்.*

பேர்ள் துறைமுகம் (Pearl Harbour) குண்டுவீச்சுக்கு இலக்காகியது. அதனைத் தொடர்ந்து வந்த நாட்கள் நாசபயங் கரமாகவிருந்தன. நேசநாடுகளைச் சேர்ந்த 140, 000 இற்கும் மேற்பட்டவர்களை யப்பானியர் போர்க்கைதிகளாகப் பிடித் தனர். இக்கைதிகளில் காற்பங்கினர் யப்பானியப் படைகளால் கொல்லப்பட்டனர்.

அவர்களுக்கு மருத்துவ வசதி மறுக்கப்பட்டது. அவர்கள் பட்டினி போடப்பட்டனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அவர்களுக்கென அனுப்பிய மருந்து மற்றும் உணவுக் கப்பல்கள் யப்பானியர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. யப்பானியப் படைகளால் அக்கைதிகள் மருத்துவ ஆராய்ச்சிக்கும் அர்ப்பணிக் கப்பட்டனர்.

சக்தியின்மை மற்றும் வெப்பமண்டல நோய்களால் பத்தா யிரக்கணக்கில் போர்க்கைதிகள் இறந்தனர். யப்பானியப் படை கள் அதை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தன. உயிர் பிழைத்த போர்க்கைதிகள் சாகும்வரை வேலை செய்யுமாறு திட்டப்பட்டனர். போர் மேலும் 12 மாதங்களுக்கு நீடிக்கு மாயின் அக் கைதிகளில் எவருமே பிழைத்திருக்கமாட்டார்கள்.

போருக்கு முன்னர் ஆயிரத்தில் ஒரு கைதிகூட, யப்பானியர் களை உயிருடன் கண்டிருக்க மாட்டான். அவர்களைக் கண்ட

நாளிலிருந்து போர்க்கைதிகளுக்கு அவர்கள் விரோதிகளாகவும், விகாரமானவர்களாகவும், கொடூரம்மிக்கவர்களாகவும், புரியமுடியாதவர்களாகவும், மனிதகுலத்தைச் சாராதவர்களாகவும் உண்மையில் மனிதரற்றவர்களாகவுமே தோன்றினர். யப்பானியர்களும் அவ்வாறே போர்க் கைதிகளைப் பார்த்தனர்.

இன்று தமக்கு அடுத்து என்ன நடந்தது என்பது பற்றிக் கதைக்கமுடியாத நிலையில் பல போர்க்கைதிகள் இருக்கின்றனர். போர்க் கைதிகள் கதைப்பதைத் தவிர வேறு எதையும் காண முடியாது. தவிக்கின்றனர். அவர்களனைவரையும் பொறுத்த வரையில் ஐம்பது ஆண்டுகள் கழிந்தும் போர்க்கைதிகளாகவிருந்த காலம் அவர்களது நெஞ்சினின்றும் நீங்காத நினைவலைகளாக இருந்துவருகின்றது.

போர்க் கைதிகளாகவிருந்த காலத்திலிருந்த நல்ல அதிகாரிகள், கெட்ட அதிகாரிகள், பயனற்ற அதிகாரிகள், மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள், உணவுக்காகச் சூதாடி வெற்றி பெற்று இன்றும் வாழ்ந்து வருபவர்கள், சூதாட்டத்தில் தோல்வியுற்றுத் தங்கள் உயிர்களை இழந்தவர்கள், உணவு வியாபாரம் செய்து செல்வந்தரானவர்கள். அவ்வியாபாரத்தைத் தவறாக முடித்துக்கொண்டதால் வங்குரோத்தாகி, வாழ்க்கையிலும் வங்குரோத்தாகியவர்கள், புகையிலைக்காக உணவை விற்று புகைத்து மாண்டவர்கள், அடிமைத்தொழில் செய்ய விரும்பாது தங்களை அங்கவீனர்களாக்கிக்கொண்டவர்கள், பணத்துக்காக அங்கவீனர்களானவர்கள், மேலும் வாழவிரும்பாது தம்மை மாய்த்துக்கொண்டவர்கள், கடவுள் தங்களைக் காப்பாற்றுவார் என்ற முடிவைக் கொண்டவர்கள், கடவுள் இல்லை என்ற முடிவைக்கொண்டவர்கள் யாவரும் அந்தப் போர்க் கைதிகளின் நினைவில் இன்றும் நீங்காது இருந்து வருகின்றனர்.

போர் தொடங்கிய காலத்தில் ஜெனிவா உடன்படிக்கைக்கு மாறாகத் தப்பிச்செல்ல மாட்டோம் எனச் சத்திபப் பிரமாணம் செய்து கையொப்பம் இடுமாறு தங்கள் வசமிருந்த போர்க்கைதிகளை யப்பானியர்கள் நிர்ப்பந்தித்தனர். எல்லா இடங்களிலுமிருந்த கைதிகள் அதற்கு மறுத்தனர். அந்த இடங்களில் எல்லாம் யப்பானியர்கள் பலவந்தத்தைத் தீவிரமாகப் பிரயோகித்தனர். இறுதியில் சத்தியப் பிரமாணம் செய்வதால் எதுவும் நேரிடப்போவதில்லை எனப் போர்க் கைதிகளின் அதிகாரிகள் அறிவுறுத்தியதின் பேரில் கைதிகள் அனைவரும் சத்தியப்பிரமாணத்தில் கைச்சாத்திட்டனர்.

தப்பித்துச் செல்ல முயல்பவர்களைச் சித்திரவதை செய்து கொல்வதில் யப்பானியர்கள் கைதேர்ந்தவர்கள். அவ்வாறு தப்பித்துச் செல்ல முயல்பவர்களைப் பிடிக்கும் ஜப்பானியர்கள் ஏனைய கைதிகளின் முன்னிலையில் அவர்களை ஒரு கம்பத்தில் பிணைத்து, துப்பாக்கி முனையில் பொருத்தப்பட்டிருச்கும் கத்தியால் குத்துவார்கள். இல்லையேல் அவர்களை மின்கம்பியில் தலைகீழாகத் தொங்கவிட்டுச் சாகும்வரை அடிப்பார்கள். அது மற்றவர்களுக்கு ஒருபாடமாகவிருக்கட்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் அப்படி நடந்துகொண்டார்கள். தப்பிச்செல்லும் ஒவ்வொருவருக்கும் பதிலாகப் பத்துப்பேர் கொல்லப்படுவர் எனக் கைதிகளை மிரட்டினர். அப்படி அவர்கள் செய்தகாலமொன்றும் இருந்தது. ஆனால் ஒருசிலரே தப்பிச்சென்றதால் யப்பானியப் படைகள் அப்படி நடந்துகொண்டது குறைவாகும்.

தாங்கள் கைதிகளாக வைத்திருந்தவர்களுக்கு யப்பானியர்கள் செய்த கொடுமைகள் மற்றவர்களின் உடலுக்கும் உயிருக்கும் பயங்கரத்தை ஊட்டுவனவாக்விருந்தது. அப்படியிருந்தும் கூட கைதிகள் அவர்களின் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டனர். அவர்கள் தப்பிச் செல்ல முயற்சித்தால் சித்திரவதைக்குள்ளாகிச் சாவடைவது நிச்சயமாகும். சிறைச்சாலையிலிருந்தால் ஒன்றில் உயிர் பிழைப்பர் அல்லது சாவடைவர். இவ்விரண்டு வழிகளுமே அக்கைதிகளுக்கு இருந்தது. அது தவிர தப்பிச் செல்ல முற்பட்டுச் சாவடைதல் அல்லது ஏதுமற்று பல்லாயிரக்கணக்கான கைதிகள் போன்று கைதிகளாக இருந்து சாவடைதலே கடைசிவழியாகவிருந்தது.

தங்களது படைகளைப் பராமரிப்பது போன்று கைதிகள் இருக்கும் முகாம்களையும் யப்பானிய நேரப்படியே (Tokyo Time) யப்பானியர் நிருவகித்து வந்தனர். முகாம்களில் அதிகாலையில் சங்குகள் ஒலி எழுப்புகின்ற வேளையில் யப்பானுக்கு மேற்கிலுள்ள நேர வலயங்களில் விடிந்திருக்கமாட்டாது. ஆகவே அங்குள்ள கைதிகள் விடியுமுன்னே அதிகாலையிலேயே நித்திரை விட்டு எழுந்துவிடுவர். துப்பாக்கிகள், பொல்லுகள் ஏந்தியவண்ணம் கூரிய முனையுடைய சப்பாத்துக்களை அணிந்துள்ள யப்பானிய காவலாளிகள் தங்கள் காவலரண்களில் இருந்து பெருஞ் சத்தத்துடன் வெளியேறி சிறைக் கைதிகளை காலால் உதைத்து எழுப்புகின்ற சத்தமும், அவர்களை வெளியே போகுமாறு பணிக்கும் சத்தமுமே விடியற்காலைக்கு முன்னர் கேட்கும்.

யப்பானிய மொழியில் பெயர்ப்பட்டியல் ''ரெங்கோ'' (Tenko) என அழைக்கப்படுகின்றது. எண்கள் ''பாங்கோ'' (Bango) என அழைக்கப்படுகின்றது. இச்சி (Ichi), நி (Ni), சான் (San), சி (Shi), கோ (Go), றோக்கு (Roku), சிச்சி (Chichi), கச்சி (Hachi), கு (Ku), யூ (Ju) என ஒன்றிலிருந்து பத்து வரைக்குமாக இலக்கங்கள் அழைக்கப்படுகுன்றது. பதினொன்று யூ இச்சி எனவும் இருபத்தொன்று நியூ இச்சி எனவும் அழைக்கப்படுகின்றது. மேற்கு நாட்டவரைப் பொறுத்த வரையில் இந்த அன்னிய இலக்க முறையைக் கற்பது மிகவும் கடினமாகவிருந்தது. அமெரிக்கர்களைப் பொறுத்த மட்டில் ''பாங்கோ'' என்பது கூக்குரலைக் குறிக்கின்றது. அதனால் இந்த யப்பானிய எண்களை அவர்கள் தவறாக உச்சரித்தனர். யப்பானிய மொழியில் அந்த இலக்கங்கள் பிறவுன்ஸ் (Bronze) இலிருந்து மேற்குக் கரை (West Coast) வரை அழுத்தி உச்சரிக்கப்படுகின்றது. பல்வேறு இனத்தவர்களும் கைதிகளாக இருந்த முகாம்களில் அதை உச்சரிப்பது மிகவும் மோசமாக இருந்தது. அதனால் ஒவ்வொரு நாட்காலையிலும் எண்ணுக் கணக்கு குழப்பமடைந்தது. அப்போது யப்பானியர்கள் உரத்துக் கூக்குரலிடுவர். அதைப் பார்த்து மரங்களிலுள்ள குரங்குகளும் கூக்குரலிடும்.

பெரிய முகாம்களில் பெயர் கூப்பிடுவது முறையாக இருக்குமாயின் அதை ஒரு மணிநேரத்தில் முடித்துவிடலாம். கைதிகளால் தங்களது இலக்கங்களைச் சரியாக உச்சரிக்க முடியாத வேளையில் பெயரை அழைப்பது குழப்பத்திற்கு உள்ளாகிவிடுகின்றது. இந்த நிலையில் பெயர்களை அழைப்பதை நிறைவு செய்வதற்கு இரண்டு மணிநேரங்களுக்கு மேல் தேவைப்படும். பெயரை அழைப்பதற்கு எவ்வளவு நேரம் கூடுதலாகச் செலவு செய்யப் படுகின்றதோ அவ்வளவுக்கு காலை உணவுக்கு முன்னர் கைதிகள் அடியும் உதையும் வாங்குவர்.

யப்பானியர்கள் கைதிகளை அடிக்கின்ற வேளையில் தாங்கள் கைதிகளிலும் பார்க்க உயரத்தில் குறைவாகவிருப்பதுபற்றி வெட்கப்படுவதில்லை. கைதியுடன் சரி நிகராக நிற்பதற்காக அவர்கள் பெட்டிகளில் ஏறிநிற்பார்கள், அல்லது கைதிகளைக் குழிகளில் நிற்கச் செய்வார்கள்.

எந்நேரமும், எங்காவது ஒரு கைதி அடிவாங்கிக்கொண்டே இருப்பான், இரவு நேரத்தில் கைதிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவை இருட்டிய பின்னர் கீழே உட்கார்ந்து கொண்டே சாப்பிடுவார்கள் என்ற எண்ணத்தில் இரவுக் காவலர்கள் மெதுவாகத் தவழ்ந்து சென்று கைதிகளிருக்கும்

குடிசைகளை எட்டிப் பார்ப்பார்கள். அந்நேரத்தில், கால்களைத் தவறான கோணத்தில் வைத்தவாறு சாப்பிடுபவர்களை அவர்கள் அடிப்பார்கள் அல்லது தாம் வந்தபோது எழுந்து நிற்கச் சொல்லாததற்காகக் கதவினருகில் நிற்கும் கைதியைப் பிடித்துக் கதவுடன் மோதுவார்கள். அல்லது பாய்ந்து அடிப்பார்கள். அதன் பின்னர் எழுந்து நிற்பதற்காக அங்குள்ள அனைவருக்கும். அடிப்பார்கள். கைதிகளுக்குக் காவல்காரர்கள் அடிக்காத பட்சத்தில் கைதிகள் ஒவ்வொருவரும் வரிசையாக வெளியே வந்து காவலாளிக்கு முன்னர் பாய்ந்து தலையைத் தாழ்த்தி பதினைந்து நிமிடத்திற்கும் ஏழு தடவை வணக்கம் செலுத்த வேண்டும்.

சிலவேளைகளில் விளக்கு அணைப்பதற்கு அரை மணிநேரம் இருக்கையில் ஒரு காவலாளி வந்து கைதிகளை நித்திரைக்குச் செல்லுமாறு பணித்துவிட்டுச் செல்வார். அவர் அப்படிப் பணித்ததும் கைதிகள் நித்திரைக்குச் செல்வர். அவர் சென்றதும் இன்னொரு காவலாளி வந்து நேரத்திற்கு நித்திரைக்குச் சென்றதற்காக கைதிகளை அடிப்பார்.

காவலாளிகள் அடிக்கடி வந்து சில கைதிகளைப் பிடித்து ஒரு கூட்டுக்குள் விடுவார்கள். அக்கூட்டுக்குள் கைதிகள் நிற்கவோ இருக்கவோ முடியாது. சிலவேளைகளில் கைதிகளைக் காட்சிப் பொருளாகக் காவல் விடுதிக்கு வெளியே நிற்கவிடுவர். அப்பொழுது அக்கைதி கொழுத்தும் வெய்யிலில் தொப்பி இன்றி கண்ணைத் திறந்து சூரியனைப் பார்த்தவாறு நிற்பார். ஏனைய கைதிகள் எதுவும் செய்யமுடியாத நிலையில் வெறுமனே அக்கைதியைப் பார்த்தவண்ணம் நிற்பர். சிலவேளைகளில் கைதியிடம் ஒரு பெரிய கல்லைக் கொடுத்து அந்தக் கைதியின் கைகள் சோர்வடையும்வரை தலைக்கு மேலாகத் தூக்கி வைத்திருக்குமாறு பணிப்பார்கள். சில வேளைகளில் கூரிய கற்களுக்கு மேலாக முழங்காலில் நிற்கச் செய்வார்கள். இவ்வாறு கைதி நிற்கையில் அவரது இரத்தோட்டத்தைத் தடை செய்யும் வகையில் அக்கைதியின் முழங்காலின் பின்புறத்தில் ஒரு பெரிய மரக்குற்றியை வைப்பார்கள். அல்லது முட்கம்பியினால் அல்லது மின்கம்பியினால் கைதியின் கைகளை உடம்புடன் சேர்த்து இறுக்கமாகக் கட்டுவார்கள். காவலர்கள் கடமை மாறும் வேளைகளில் கைதிகளிடம் பற்றவைக்கப்பட்ட ஒரு சிகரட்டை ஒரு முறை இழுக்குமாறு நீட்டுவது போன்று நீட்டிக் கைதியினுடைய தொண்டைக்குள் திணித்துவிடுவார்கள். அல்லது கைதியினுடைய மூக்குக்குள் திணித்துவிடுவார்கள். அல்லது உடம்பில் தேய்த்து விடுவார்கள் அல்லது

கைதியை அடிப்பார்கள். அதன் பின்னர் ஒவ்வொரு கைதியும் அந்தக் கைதிக்கு அடிக்க வேண்டும். இல்லையேல் அடிக்காத கைதிகள் அடி வாங்குவார்கள்.

யப்பானியர் ஒருவரை பல நாட்களுக்குத் தொடர்ந்து அடிப்பார்கள். மின் கம்பியில் தொங்கவிடுவார்கள். மின்கம்பியில் தூக்கி சாவடைய விடுவார்கள். அதுபற்றி அவர்கள் எவ்வித கவலையும் கொள்வதில்லை.

சிலவேளைகளில் கைதிகள் இருவர், இருவராகப் பிரிக்கப் பட்டு அடிபடுமாறு பணிக்கப்படுவார்கள் அவர்கள் அடிபடுவது போன்று நடித்தால் காவலர்கள் அவர்களுக்கு அடிப்பார்கள்.

மலுக்காசிலுள்ள (Maluccas) அம்பொன் தீவிலிருக்கும் (Island Of Ampom) ரான்ரூய் (Tantui) முகாமில் ஒல்லாந்தர் களும், அவுஸ்திரேலியர்களும், அமெரிக்கர்களும் சிறைவைக்கப் பட்டிருந்தனர். ஒல்லாந்தர்களில் சிலர் தங்கள் மனைவியர்க ளுக்கு இரகசியமாகத் தங்களைப் பற்றிய செய்திகளை அனுப் புவதற்கு முயற்சிக்கையில் யப்பானியர் வசம் அகப்பட்டுக் கொண்டனர். அச்செய்திகள் படை சம்பந்தப்பட்டனவல்ல. அது அவர்களது சொந்த விடயங்களுடன் சம்பந்தப்பட்ட தாகும். ஆனால் ஒல்லாந்தர்களில் 34 கைதிகளைப் பிடித்து வெய்யிலில் நிற்க வைப்பதற்கு யப்பானியர்களுக்கு அது போது மானதாயிருந்தது.

ரான்ரூய் யப்பானியர்களின் கடற்படை முகாமாகும். அங்கு நிறையக் கப்பல்கள் நின்றன. ஒரு நாள் அங்குள்ள கடற் படையதிகாரி இரண்டு வாகனங்கள் நிறையக் கைதிகளை ஏற்றிக்கொண்டு வந்தார். அவர்களுக்கு அருந்துவதற்கு நிறைய மதுவகைகளைக் கொடுத்தார். அதன் பின்னர் அவர்களை தளப்பந்தாட்டம் (BASEBALL) விளையாடுவதற்குப் பணித் தார். அதை அதிபாரக் குத்துச் சண்டையை நெறிப்படுத்துவது போன்று தானே நெறிப்படுத்தினார். அங்குள்ள ஏனைய கப் பல்களிலுள்ள யப்பானியர்கள் அந்த விளையாட்டைக் கடைசிக் கைதி மூச்சற்று விழும்வரை கைகொட்டிப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தனர். அந்த விளையாட்டை ''ஒல்லாந்தரின் பூங்கா விருந்து'' (DUTCH GARDEN PARTY) என அவுஸ்தி ரேலியர்கள் அழைத்தனர்.

யப்பானுக்கு நன்மையளிக்கும் வகையில் சிறைக்கைதிகள் வேலை செய்ய வேண்டுமென யப்பான் அறிவித்தது. வேலை

செய்யாத கைதிகளுக்கு உணவு மறுக்கப்பட்டது. 1942 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை கைதிகளுக்கு உணவு வழங்குதல் பற்றி எவ்வித ஒழுங்கும் கடைப்பிடிக்கப்படவில்லை. இவ்வேளையில் போர்க் கைதிகள் பிடிக்கப்பட்டு பல மாதங்கள் கழிந்துவிட்டன. அதன் பின் உணவு வழங்குவதற்கு ஒழுங்கு முறை ஒன்று கடைப்பிடிக்கப்பட்டது. படைசார் கைதிகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு றாத்தல் நாலு அவுன்ஸ் உணவு வழங்கப்பட்டது. அவர்களின் உழைப்பின் நிமிர்த்தம் மேலதிகமாக ஏழு அவுன்ஸ் உணவு வழங்கப்பட்டது. ஆனால் சமாதான காலத்தின்போது உடல் உழைப்பு அற்ற அமெரிக்கப் படையினருக்கு நாளொன்றுக்கு நாலு றாத்தல் ஏழு அவுன்ஸ் உணவு வழங்கப்பட்டது. போர்க்காலத்தின்போது அவர்களுக்கு அதிகளவு உணவு வழங்கப்பட்டது. கடினமாக உழைக்கின்ற கைதி ஒருவருக்கு யப்பானியர்கள் வழங்கிய உணவு சமாதான காலத்தில் அமெரிக்கப் படையினருக்கு வழங்கும் உணவிலும் பார்க்க 60 சதவீதம் குறைவானதாகும். உணவுத் திட்ட அறிக்கைகளில் மட்டுமே இந்த அளவு முறைகள் இருந்தன. ஆனால் கைதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உணவு மிகவும் குறைவானதாகும். ஆகவே படைச் சேவையைச் சேர்ந்த உழைக்கும் கைதிகளுக்கும் மிகக் குறைவான உணவே வழங்கப்பட்டுவந்தது.

இந்திய ஒல்லாந்தர்களுக்கு பலவகையான இந்தோனேசிய உணவு வழங்கப்பட்டது. ஏனைய கைதிகளுக்கு இறைச்சியும், உருளைக்கிழங்கும் வழங்கப்பட்டது. ஆசிய நாட்டவரின் சோறு அவர்களுக்கு ஒத்துவரவில்லை. அத்துடன் முகாம்களில் வழங்கப்பட்ட சோறு மிக மோசமாகக் காணப்பட்டது. அச்சோற்றில் கஞ்சல், குப்பைகள், கற்கள், மண்கள், உடைந்த பீங்கான் துண்டுகள், வைக்கோல்கள், ஆணிகள், எலி எச்சங்கள், புழுக்கள் மற்றும் அந்துப் பூச்சிகள் காணப்பட்டன. அந்தச் சோற்றில் காணப்பட்ட அந்துப் பூச்சிகளை மிருகப் புரதம் எனக் கைதிகள் கணித்தனர்.

சத்து ஒரு புறமிருக்க அந்த உணவையுண்ட கைதிகள் ஒருபோதும் திருப்தியடையவில்லை. ஆகவே மேலும் உணவைப் பெறவேண்டும் என்ற அவா அவர்களைப் பற்றியது. இறைச்சியிலும் பார்க்கச் சீனி இல்லாமை, அவர்களின் நிலைமையை மேலும் மோசமாக்கியது. கறுப்புச் சந்தையில் சீனியின் விலை மிக உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. தகரத்திலடைக்கப்பட்ட பால்மா தங்கத்தின் விலையை எட்டியிருந்தது. காவலாளிகளுக்குத் தெரியாமல் பால்மாவை முகாமுக்குள் கொண்டு வரும் கைதிகள் அதனைத் தனது படுக்கையின் கீழ் வைத்து

விட்டு இடைக்கிடை எடுத்துப்பார்த்தும் ரசித்துக்கொண்டும், தனது உடம்பு பூராவும் உரசிக்கொண்டு அந்த ஆனந்தத்தைப் பருகிக்கொண்டிருப்பான். எவ்வளவு காலம்வரை அதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமோ அவ்வளவு காலம்வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டுக் கடைசியிலேயே அதனை உடைத்துக் குடிப்பர். அவர்கள் நாளடைவில் சீனிக் கஞ்சர்களாகவும், சீனிக்காகத் தொந்தரவு செய்பவர்களாகவும் மாறினர். அவர்கள் அசிங்கமான கதைகளைப் பரிமாறிக்கொள்வது போன்ற உணவுப் பொருட்களையும் பரிமாறிக்கொண்டனர்.

போர்க் கணிப்பீட்டு முறையின் பிரகாரம் 1942ஆம் ஆண்டு யப்பானியர்கள் போர் நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்களைத் தீட்டி வந்தனர். பர்மா நடவடிக்கையைத் தங்களுக்குச் சார்பாகத் திருப்புவதற்கு ஒரு புகையிரதப் பாதையை அமைப்பது அவசியமாயிற்று. இப்பாதையின் ஒரு பக்கத்தை அமைப்பதற்கே இரண்டு முதல் ஐந்தாண்டுகள் வரை செல்லும் என யப்பானியப் பொறியியலாளர்கள் கூறினர். ஆனால் குறைந்தது 18 மாதங்களுக்குள் அதாவது 1943 ஆம் ஆண்டின் முடிவில் அப்பாதை பாவனைக்குத் தயாராகியிருக்கவேண்டுமெனப் படைத் தலைமையகம் உத்தரவிட்டது. உலகிலேயே அது ஒரு பாரிய பணியாகக் காணப்பட்டது. ஆனால் யப்பானியரிடம் பல்லாயிரக்கணக்கான போர்க் கைதிகள் இருந்தனர். அடிமைகள் போன்று அவர்கள் கடுமையாக வேலை செய்வர். எனவே அவர்கள் இறக்கும்வரை வேலைசெய்ய நேரிட்டாலும் அப்புகையிரதப்பாதை அமைத்து முடியும்வரை வேலை செய்தே ஆகவேண்டியிருந்தது. அது நடைபெற்றது.

250 மைல் நீளமான புகையிரதப் பாதையில் 61,000 க்கும் அதிகமான போர்க்கைதிகள் வேலை செய்தனர். அவர்களில் 30,000 பேர் பிரித்தானியர்கள், 18,000 பேர் ஒல்லாந்தரும் இந்தோனேசியருமாவர். மிகுதி 13,000 அவுஸ்திரேலியர்களும், 650 அமெரிக்கர்களும் அதில் வேலை செய்தனர். அவர்களுள் நாற்பத்தைந்து வீதத்தினர் புகையிரதப் பாதையில் வேலை செய்தனர். போர்க் கைதிகள் வேலைக்கு அமர்த்தப்பட்ட பாரிய வேலைத்திட்டம் இது ஒன்றுமட்டுமேயாகும். இவ் வேலைக்கும் இயந்திரங்கள் பாவிக்கப்படவில்லை. இப்புகையிரதப் பாதையைக் கையினாலேயே கட்டி முடிக்கும் கட்டாய நிலைக்குக் கைதிகள் உள்ளானார்கள்.

புகையிரதப் பாதை கட்டி முடிப்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்ட எட்டு மாதங்களின் பின்னர் பர்மாவிலுள்ள கோட்டையை மாத்திரம் கைப்பற்றுவதால் எவ்வித

பயனும் இல்லை என யப்பானியர் கருதினர். தாக்குதல் நடத்த வேண்டிய நிலையிலிருந்தமையால் அவர்கள் புகையிரதப்பாதை கட்டிமுடிக்கும் காலக்கெடு பற்றி மீண்டும் தீர்மானித்தனர். 1943 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்கு முன்னர் புகையிரதப் பாதை கட்டி முடிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அதிலிருந்து புகையிரதப் பாதை எங்கும் ''விரைவாக, விரைவாக'' என்ற குரல் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருந்தது.

வேலை தொடங்கப்பட்ட காலத்தில் ஒரு தொகுதிக் கைதிகளுக்கு குறிப்பிட்டளவு வேலை ஒதுக்கப்பட்டது. அவர்கள் தங்கள வேலையை முடித்ததும் முகாமுக்குத் திரும்பலாம். அது கைதிகளுக்கு ஒரு ஊக்குவிப்பாக இருந்தது. சில கைதிகள் அந்த ஊக்குவிப்புக்கு மதிப்பளித்தனர். அவர்கள் துரிதமாகவும், கடினமாகவும் வேலை செய்யத் தொடங்கினர். இவ்வாறு அவர்கள் வேலை செய்ய முற்பட்டதனால் யப்பானியர்கள் கைதிகளை முட்டாள்களாக்க முற்பட்டனர்.

பர்மாவிலிருந்த 95 வீதமான போர்க் கைதிகள் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர். அதிகமான கைதிகள் மலேரியாவுடன் வயிற்றுப்போக்கு (DYSENTRY), பெரிபெரி (BERIBERI), பெலிகிறா (PELLEGRA), டெங்கு (DENGUE), சன்னிக்காய்ச்சல் (SCRUB TYPHUS) மற்றும் வெப்பமண்டலப் புண்கள் (TROPICAL ULCER), பஜடேனா (PHAGENDAENA) போன்ற பயங்கரமான நோய்களினால் பீடிக்கப்பட்டனர். உணவு, துர்நாற்றம் என்பவற்றிலிருந்து பரவும் பஜடேனா என்னும் நோய் அரைப்பட்டினி கிடப்பவர்களையும், மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்களையும், வெப்பமண்டலத்தில் உள்ள படைப்பிரிவுகளையும் இலகுவில் தாக்குகின்றது. இத்தகைய நோய்களினால் பீடிக்கப்பட்ட கைதிகள் பற்றிப் பலபுத்தங்களை எழுதலாம். உலகில் மிக மோசமாக இந்தப் புகையிரதப் பாதையில் வேலை செய்தவர்களையே அந்நோய் தாக்கியது.

யப்பானியரின் மருத்துவ விதிமுறை விசித்திரமானது. அதன்படி அடிமைத் தொழில் செய்யும் கைதிகளில் 15 விகிதத்தினர் மட்டுமே நோயாளிகளாக அனுமதிக்கப்படுபவர். அத்தோடு ஒரு கைதிக்கு ஒரு நோய்தான் பீடித்திருக்கமுடியும். ஆகவே நோயாளர்களின் பட்டியலை ஆராய்வதிலேயே மருத்துவர்களின் அதிகளவு நேரம் கழிந்தது. மனிதாபிமானமான இந்தப் பிரச்சினையில் தலையிடுவது குறித்து மருத்துவர்கள்

வருத்தப்பட்டனர் பிரித்தானிய மருத்துவர் ஒருவரும், அவரது உதவியாளர் ஒருவரும் இதற்குத் தனி வழிமுறையொன்றைக் கையாண்டனர்.

நோய்வாய்ப்பட்டுள்ள சிறைக்கைதிகளைப் பரிசோதிக்கும் அவர்கள் ஒருவரை சாதாரண நோயாளி என்றும் மற்றவரைக் கடுமையான நோயாளி என்றும் தரம்பிரித்தனர். சாதாரண நோயாளியை வேலைக்கு அனுப்பினால் அவன் வேலைப்பழுவின் நிமிர்த்தம் நிச்சயம் சாவடைவான். கடுமையான நோயாளியை முகாமில் வைத்திருந்தால் அவன் தப்பிப் பிழைக்கக்கூடிய சாத்தியக்கூறுண்டு. ஆனால் யப்பானிய முறைப்படி கடுமையான நோயாளியை வெளியில் அனுப்பினால் அவன் நிச்சயம் இறப்பான். சாதாரண நோயாளியை முகாமில் வைத்திருந்தால் அவன் தப்பக்கூடிய சாத்தியமுண்டு.

கடைசியாக 1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாளன்று சியாமின் (SIAM) எல்லைப்பகுதியிலுள்ள கொன்குயிற்றா (KONKUITA) என்னும் இடத்தில் புகையிரதப் பாதையின் இரு முனைகளும் இணைந்தன. அப்போது ஒரு பிரச்சாரப் படம் எடுக்கப்பட்டது. சிறைக் கைதிகள் புகையிரதப் பாதையைப் பொருத்தும் காட்சி படமாக்கப்பட்டது. அதற்கு ஒரு வாட்டசாட்டமான கைதி தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான ஆடைகள் உடுத்தப்பட்டு படம் எடுக்கப்பட்டது. படம் எடுத்து முடிந்ததும் அக்கைதி உடுத்தியிருந்த உடைகளை யப்பானியர்கள் அகற்றினர். கைதி மீண்டும் பழைய உடையை உடுத்திக் கொண்டார்.

அக்கைதிகள் இன்னமும் அடிமைகளாகவே இருந்தனர். அவர்களுக்குத் தேவையான வேலை யப்பானியர்வசம் போதியளவு இருந்தது. கைதிகள் கப்பல்மூலம் தென்தாய்லாந்துக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

கைதிகள் நிர்மாணித்த புகையிரதப் பாதையில் புகைவண்டிகளை ஓட்டிச் செல்வது யப்பானியர்களுக்குப் பெரும் பிரச்சினையாகவிருந்தது. பாதையை நிர்ணயிப்பதற்காகவே வேலை செய்த கைதிகள், யப்பானியர் பாதுகாப்பாகச் செல்வேண்டுமென விரும்பினார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆகவே சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் நாசவேலை செய்தனர்.

ஆற்றங்கரைகளில் கடினமான மண்ணைப் போடாது குப்பை கூழங்களைக் கொண்டு பள்ளங்கள் நிரப்பப்பட்டன. அல்லது அழுகக்கூடிய மரக்குற்றிகளைப்போட்டு மூடுவதற்கும் வசதியிருந்தது.

1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாளன்று நண்பகல் படுமோசமான செயல் ஒன்று நடந்துள்ளது என அறிவித்த யப்பானிய தேசிய வானொலி, யப்பானியர்கள் அனைவரையும் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொண்டது. அப்போது யப்பானிய தேசியப் பாடல் ஒலிபரப்பானது. அதைத் தொடர்ந்து முன்னொருபோதும் கேட்டிராத கரகரத்த காரசாரமான குரல் யப்பான் எங்குமுள்ள வானொலிகளில் கேட்டது. சாதாரண யப்பானியர்களால் புரிந்துகொள்ள முடியாத ஆதிகாலச் சொற்கள் அக்குரலில் ஒலித்தன. சூரியக் கடவுளுக்கு முன்பிருந்த காலத்திலிருந்து வெல்லமுடியாத நாடு என யப்பான் வரலாற்றுப் புகழ் பெற்றிருந்தது. இப்பொழுதுதான் மக்கள் யப்பானிய மன்னனின் குரலை முதன் முதலாகக் கேட்டனர். யப்பானுக்கு ஏற்பட்ட துரதிஷ்ட சம்பவத்தை இந்த முதலாவது சக்கரவர்த்தி மக்களுக்கு எடுத்துரைத்தார். வெற்றி கொள்ளமுடியாத யப்பானிய நாடு கிரோசிமா, நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டு போடப்பட்டதால் தவிடுபொடியாகி சரணடையும் இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டது. இத்துடன் இரண்டாவது உலகப் போரும் முடிவடைந்தது.

## இடி இடிக்கும்பொழுது ஜன்னல் குலுங்குவது ஏன்?

நீர் நிலைகளில் சிறிய கல்லை எறிந்தால் அலைகள் எழுந்து கரையை அடைவதைப் பார்த்திருப்பீர்கள். அதுவே பெரிய கல் ஆனால் அலைகள் வேகமாக வந்து கரையைத் தாக்குவது தெரியும். அதுபோல சாதாரண சப்தங்கள் காற்றில் அலைகளை உருவாக்கும், அந்த அலைகள் நம் செவியை அடையும்பொழுது நாம் சப்தத்தைக் கேட்கிறோம்! ஆனால் இடி உண்டாக்கும் அலைகள் அதிக பலத்துடனும், வேகத்துடனும் வந்து நம் காதுகளைத் தாக்கும். இந்தத் தாக்குதலில் சிலருக்கு செவிப்பறை கிழிவதும் உண்டு. இப்படிப்பட்ட பெரிய சப்த அலைகள் ஜன்னலைத் தாக்கும் உடைந்து ஜன்னல்கள் குலுங்குவதும், சிலசமயம் ஜன்னல் கண்ணாடிகள் விழுவதும் உண்டு.

## சமாதானக் கேலிக்கூத்து பகுதி-2

# தமிழீழ விடுதலைப் புலிகளும், மக்கள் முன்னணியும் சமாதான நடவடிக்கையும்

*'லங்கா காடியன்', 01-09-95*

**எஸ். சதானந்தன்**

**1994**ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களுக்கு இரு மாதங்கள் இருக்கையில், மேற்குறிப்பிட்ட விவாதங்கள் பிரசுரிக்கப்பட்டன. முன்னரே எதிர்பார்க்கப்பட்டதுபோல், பாராளுமன்றத் தேர்தலின்போதோ அன்றி சனாதிபதி தேர்தலின்போதோ தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வுத்திட்டம் அல்லது சமாதானத்திட்டம் எதுவும் இந்த நாட்டு மக்கள் முன் வைக்கப்படவில்லை.

எனினும், சனாதிபதித் தேர்தல் பிரச்சார காலத்தின்போது திருமதி. குமாரதுங்கா 'சமாதானம்' பற்றித் தொடர்ந்து ஐயப்படத்தக்கவகையில் பேசிவந்தாரே தவிர எதனையும் தெளிவுபடக்கூறவில்லை. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவருகின்ற உள்நாட்டுப் போருக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதையே எல்லா இன மக்களிலும் அதிகமானோர் விரும்புகின்றனர். அவர்களின் விருப்பதிற்கு ஆதரவாகவே சிறீலங்கா சுதந்திரக் கட்சி தானும் சமாதானத்தை விரும்பி நிற்கின்றது என்று கூறிவந்தது. இச் 'சமாதானச்சூழல்' விடுதலைப் புலிகளின் வெற்றிகரமான ஆயுதப்போராட்டத்தின் வாயிலாகவும் தமிழ் மக்களின் அர்பண உணர்வின் வாயிலாகவும் தோன்றியதொன்றாகும் இவ்விரு நடவடிக்கைகளும் அரசின் படைரீதியான தீர்வை இல்லாமல் செய்தன. இந்த வாதங்களைக் கொழும்பிலுள்ள தமிழர் செயற்பாட்டுக் குழு 'சமாதானத்தை ஏற்படுத்துகின்றவர்கள் யார்? என்ற கட்டுரையில் எழுப்பியுள்ளது. (சண்டே ஒப்சேவர் 30.07.95).

கொழும்பில் உள்ள அநேகமான தமிழ்க் கட்சிகள், சமாதானத் திட்டம் ஒன்றை முன்வைக்கும்படி முதலில் ஐக்கிய

தேசியக் கட்சி அரசாங்கத்தையும் பின்னர் மக்கள் முன்னணி அரசாங்கத்தையும் வற்புறுத்தி வந்தன. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசியல் பேச்சுவார்த்தையும் அதனை நோக்கி நகர்வதும் வடக்குக் கிழக்கில் மக்களிடமிருந்து விடுதலைப் புலிகளைப் பிரிப்பதற்கு உதவும் என்று அவர்கள் வாதிடுகின்றனர். உதாரணமாகத் தமிழீழ மக்கள் விடுதலை (புளொட்) அமைப்பின் தலைவரான திரு. த. சித்தார்த்தன் அவர்கள் அரசியல் தீர்வென்றை காணுமுகமாக ஒரு தீர்வுத் திட்டத்தினை வகுக்கும்படி ஐக்கிய தேசிய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறினார். ஏனெனில், 'அப்போதுதான் விடுதலைப் புலிகளை மக்களிடமிருந்து பிரிக்கமுடியும். அப்போதுதான் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியும் அல்லது பலவீனப் படுத்தமுடியும்' என அவர் கருதினார். (ஐலண்ட் 10. 04. 94). பேச்சுவார்த்தை மூலமான எந்தவொரு தீர்விலும் விடுதலைப் புலிகள் பங்குபற்றவேண்டுமென ஒருசில தமிழ்க் கட்சிகள் கூறின. ஆனால் உண்மையில், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைத் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளெல்லாம் விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டிவிட்டால் சமாதானத்தை உடனடியாக ஏற்படுத்திவிடலாம் எனக் கருதின.

'சமாதான நடைமுறையை' தொடங்குவதற்கான ஆணித்தரமான நடவடிக்கை முதன்முதலில் சனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் 1994ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்டது. 'சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வருமாறு 'திரு. பிரபாகரன் அவர்கள் தனிப்பட்ட முறையில் மக்கள் முன்னணி அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியிருந்தார். 'வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட அரசாங்கம் தயாராக உள்ளது' என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை பதில் அனுப்பியிருந்தார். (ஐலண்ட் 08-09-94). இதனைத்தொடர்ந்து ''தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றீடாக கணிசமானளவு அதிகாரப் பரவலாக்கலைக் கொண்ட தீர்வுத் திட்டம் ஒன்றை தாம் ஏற்பதற்குத் தயாராகவுள்ளோம்'' என விடுதலைப் புலிகள் அறிவித்தனர். (ஐலண்ட் 22-09-94). விடுதலைப் புலிகளுக்கும் மக்கள் முன்னணி அரசாங்கத்திற்கும் இடையில் கடிதப் பரிமாற்றங்கள் தொடர்ந்து இடம்பெற்றன. எனினும் தொடர்ந்து போர் நடந்துகொண்டிருந்தது. படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மன்னார் கரையோரத்திற்கு அப்பால் தரித்து நின்ற கடற்படைக் கலமான ''சாகரவர்த்தனா'' விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. எனினும் வெற்றிகரமான ஒரு முடி

வையும் நம்பிக்கையுடன் ஒரு பலமான அரசியல் நடைமுறை கைக்கொள்ளப்படல் வேண்டும் எனத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த டாக்டர் திருச்செல்வம் வலியுறுத்தினார்.

ஒரு கெரில்லா அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விளங்குகின்றபடியால் அது அரசியல் நடைமுறைகளில் உண்மையில் பங்கேற்கமாட்டாது என்ற ஒரு நம்பிக்கை தெற்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக உள்ள சக்திகள் மத்தியில் பரந்தளவு நிலவியது. எனவே முன்னெப்போதும் இல்லாதவாறு தமது தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டு விடுதலைப் புலிகள் சாமாதானப் பேச்சிற்கான தமது அழைப்பை விடுத்த போது தகவல் அமைச்சர் திரு.தர்மசிறி சேனநாயக்கா அவர்கள் கூறியதுபோல் தமிழ் மக்கள் மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற தமது மனப்பூர்வமான விருப்பத்துடன் விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வந்துள்ளனர் எனத் தவறாக அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. 'விடுதலைப் புலிகள் சமாதானத்தின்மீது உண்மையில் ஆவல் கொண்டுள்ளனர். அவர்கள் இத்தகைய முன்னேற்றகரமான முயற்சியினை எதிர்ப்பவர்களாக வெளியுலகப் பார்வையில் தென்பட விரும்பவில்லை' என திரு. சேனநாயக்கா கூறினார் (ஐலண்ட் 30.09.94).

'சமாதான நடைமுறையை' உயிர்த்துடிப்புடன் வைத்துக் கொண்டு விடுதலைப் புலிகளை 'சமாதானப் பொறிக்குள்' விழுத்துவதே அரசாங்கத்தின் தந்திரோபாயமாகும். 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் விடுதலைப் புலிகள் நடந்துகொண்டது போல், வன்முறையைத் தேர்ந்தெடுக்காது அவர்களைச் சமாதானப் பொறியினுள் வைத்திருப்பதே அதன் ஒரே நோக்கமாகும்.

முதலாவது சுற்றுப் பேச்சுக்கள் ஒக்டோபர் மாதம் 13ஆம் நாளன்று நடைபெற்றன. திருவாளர்கள் கரிகாலன், இளம்பரிதி, ரவி மற்றும் டொமினிக் போன்ற உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் சமாதானக் குழுவிற்கு நியமித்தனர். திருவாளர்கள் கே. பி. (K. P.) பாலபெத்தபெண்டி (சனாதிபதியின் அந்தரங்கச் செயலகர்) லயனல் பெர்னான்டோ (முன்னாள் அரச அதிபர் - யாழ்ப்பாணம்), ராஜன் ஆசீர்வாதம், நளின் குணரத்ன (தனியார்துறை) முதலானோர் சனாதிபதியின் குழுவில் அங்கம் வகித்தனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த உயர்மட்ட உறுப்பினர்களோ அல்லது அமைச்சரவையைச் சேர்ந்த உறுப்பினர்களோ பிரதம மந்திரி திருமதி. குமாரதுங்

காவின் குழுவில் இடம்பெறவில்லை. அந்தக் குழுவில் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் காணப்படாததால் அது திருமதி குமாரதுங்கா அவர்களின் தனிப்பட்ட குழு போன்றே தோன்றியது. அதனால் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கவரும் உள்ளக நோக்குடன் இப்பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றனவா என்று சந்தேகம் கிளம்பியது. சனாதிபதித் தேர்தலின்பின்னரே அமைச்சரவை மட்டத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என ''உத்தியோகபூர்வமாக அறிவித்ததை அடுத்து (ஐலண்ட் 18-10-94) சமாதான முயற்சியில் அரசாங்கம் கொண்டுள்ள ஈடுபாடு பற்றிய சந்தேகம் மேலும் தீவிரமடைந்தது. மேலும் சமாதானத் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்கத் தவறியதன் காரணமாக திருமதி. குமாரதுங்காவின் மீதான நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகிவிட்டது. அதற்கு மாறாக, ஐக்கிய தேசியக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் திரு. காமினி திசநாயக்கா (இவர் தேர்தலுக்கு முன்னர் கொலை செய்யப்பட்டார். ''21ம் ஆம் நூற்றாண்டிற்கான தனது நோக்கின் பிரகாரம்'' அதிகாரப்பரவலுக்கான திட்டம் ஒன்றை உண்மையில் வகுத்திருந்தார் (ஐலண்ட் 02-11-94).

எனினும் அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் கட்சி தவிர்ந்த ஏனைய தமிழ்க்கட்சிகள், சனாதிபதித்தேர்தலில் திருமதி. குமாரதுங்காவிற்கு ஆதரவளித்தன. சமாதானத்தை விரும்பும் எல்லா மக்களையும் சனநாயக சக்திகளையும் பிரதம மந்திரியின் முயற்சிகளுக்கு ஆதரவு நல்குமாறும், வருகின்ற சனாதிபதித் தேர்தலில் அவரின் வெற்றியை உறுதிசெய்துகொள்ளு முகமாக ஒன்று திரளுமாறும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E. P. R. L. F.) வேண்டுகோள் விடுத்தது (டெயிலி நியூஸ் 02-11-94). திருமதி. குமாரதுங்காவின் கரங்களைப் பலப்படுத்தும் வகையில் தமிழ் மக்களின் வாக்கைத் திரட்டுமுகமாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த திரு. ஆர். சம்பந்தன் நவம்பர் மாதம் 7ஆம் நாளன்று மாலை தேசிய தொலைக்காட்சியில் தோன்றி உரைநிகழ்த்தினார். சனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசாங்கம் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்கும் என்று தமிழர்களுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது.

தேர்தல் நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் நிபந்தனையற்ற சமாதானம் என்ற திருமதி. குமாரதுங்காவின் நிலைப்பாடு மாறத்தொடங்கியது. நிட்டம் புவாவில் நவம்பர் மாதம் 7 ஆம் நாள் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது, விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கு உடன்பட்டால் மாத்திரம்

சலுகைகள் வழங்கப்படும் என்று திருமதி. குமாரதுங்கா கூறினார். (டெயிலி நியூஸ் 08- 11- 94). மேலும் சமாதான நடைமுறையை அணுகுவதில் மக்கள் முன்னணி அரசாங்கம் பின்பற்றும் உத்தியோகபூர்வமான கொள்கைபற்றியும் அவர் நவம்பர் மாதம் 12 ஆம் நாள் நடைபெற்ற சனாதிபதி பதவியேற்பு வைபவத்தின்போது கூறினார். அப்போது ''சமாதான நடைமுறைக்கான எங்களது அணுகுமுறை சிங்கள மக்களின் உரிமைகளைப் பலப்படுத்துவதுடன் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கும். அதேவேளை மற்றைய எல்லாச் சமூகத்தினரையும் சமமாகக் கணிப்பதுடன் அவர்களின் சுய கௌரவம், சுய மரியாதை என்பனவற்றையும் அங்கீகரிப்பதாகவும் இருக்கும் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்'' எனக் கூறினார். (சண்டே ரைம்ஸ் 13- 11- 94).

சிங்கள மக்களின் உரிமைகள் ஆபத்தான நிலையிலுள்ளன என்று அரசாங்கம் கருதுகின்றது என்பதனை சனாதிபதி சந்திரிகா நவம்பர் 12 ஆம் நாள் ஆற்றிய உரை எடுத்துக் காட்டுகின்றது. பொதுவாகத் தமிழ் மக்களும் குறிப்பாக விடுதலைப் புலிகளுமே இதற்கு காரணமானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர். இரண்டாவதாக மற்றைய சமூகத்தவர்களது உரிமைகள் பற்றிக் குறிப்பிட மறுத்தது அரசாங்கத்தின் கொள்கை என்றவகையில் மக்கள் முன்னணி தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் முதலானோரின் உரிமைகளைப் புறக்கணிக்க விரும்புகின்றது எனக் கருதவேண்டியுள்ளது. மக்கள் முன்னணிக்குள் இருக்கின்ற சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பங்காளிகளான இடதுசாரிகளும் மற்றும் அரசாங்கத்துக்கு வெளியே இருக்கின்ற முற்போக்குச் சக்திகளும் இந்தப் பேரினவாதக் கொள்கைக்கு எதிராகப் பேசமுடியாது மௌனமாக இருக்கின்றனர். அரசாங்கத்தின் கொள்கைபற்றி கேள்வியெழுப்பிய ஒரேயொரு அமைப்பு கொழும்புத் தமிழர் செயற்பாட்டுக்குழு ஒன்று மட்டுமேயாகும். (சண்டே ஒப்சேவர் 01- 01- 95).

தமிழ் ஆய்வாளர்களின் ஆய்வுக் கண்ணோட்டத்தின்படி நவம்பர் மாதம் 12 ஆம்நாள் நிகழ்த்தப்பட்ட உரையுடன்'' சமாதான நடைமுறை'' இல்லாது போய்விட்டதெனலாம்.

நேர்மையான ''சமாதான நடைமுறை'' என்று புதிய சனாதிபதி பேசினார். அதனைத்தொடர்ந்து விடுதலைப் புலிகள் ஏழு நாட்களுக்கு மோதல் தவிர்ப்பு நடவடிக்கைபொன்றை ஒரு தலைப்பட்சமாக மறுநாள் (13 ஆம் நாள்) அறிவித்தனர். டெயிலி நியூஸ் 15- 11- 94). எனினும் தங்களுக்கு அது பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என அரசாங்கம்

கூறியது விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் தொடர்ந்து எதிரும் புதிருமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததுடன் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டியும் வந்தனர். எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த மக்கள் அரசின் தீர்வுத்திட்டத்தை எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். ஏனெனில், தமிழ் அரசியல்வாதிகளுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் கிழிக்கப்பட்டது. மீண்டும், மீண்டும் தமிழர்களைத் திட்டமிட்டுப் படுகொலை செய்தது. மற்றும் 1987 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கை முழுமையாகச் செயற்படுத்தப்படாதமை ஒரு அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டிய பொறுப்பை அரசாங்கத்தின்மீது திணித்துவிட்டது.

தனது சமாதானத்திட்டம் நவம்பர் மாத இறுதியில் அரசியல் யாப்புச் சீர்திருத்தப் பாராளுமன்றக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என மக்கள் முன்னணி அரசாங்கம் அறிவித்தது. ஆனால் நவம்பர் மாதம் 24 ஆம் நாளன்று இக்குழுவிடம் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை (Working Paper நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி முறை ஒழிப்பு அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் நீதிமன்றச் சட்டவாக்கங்களை மறுபரிசீலணை செய்தல் முதலானவை சம்பந்தப்பட்டதாக இருந்த்து. (டெயிலி நியூஸ் 26-11-94). விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு அடிப்படையான சமாதானத் திட்டம்பற்றி எதுவும் இவ்வறிக்கையில் கூறப்படவில்லை. ''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் அரசாங்கம் தனது யோசனைத்திட்டங்களை வகுக்கத் தொடக்கியுள்ளது''. என அரசாங்கம் டிசம்பர்மாத நடுப்பகுதியில் அறிவித்தது. (சண்டே ஒப்சேவர் 18- 12- 94). இதனிடையில், இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. ஜனவரி மாதம் 8 ஆம் நாளன்று மோதல் தவிர்ப்புப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இரண்டாவது சுற்றுப்பேச்சுவார்த்தையின் பின்னர், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என அரசாங்கம் பாரிய அழுத்தத்தினைக் கொண்டுவரத் தொடங்கியது. அதனால் சமாதானத் தீர்வுத்திட்டம் ஒன்று வகுக்கப்படல் வேண்டும். என்ற அக்கறை குறைந்து காணப்பட்டது. அரசாங்கதிற்குச் சார்பான கொழும்பிலுள்ள பெரிய மனிதர்கள் போல் நடிக்கும் தமிழர்கள் ''புலிகளைப் பொறிக்குள் அகப்பட வைக்கும்' மூலோபாயம் என்று அரசின் மூலோபாயத்தை வர்ணித்து பெருமகிழ்ச்சியடையத் தொடங்கினர். விடுதலைப் புலிகளுக்கும்

தமிழ் மக்களுக்கும் இடையில் பிளவினை உண்டுபண்ணி அதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் தந்திரோபாயமாக இந்தச் சமாதான நடைமுறை புலப்பட்டது. ''பிரச்சினைக்கான தீர்மானம் அல்லது எதிர்-கிளர்ச்சி (Conflict Resolution or Counter – Insurgency) என்ற தனது கட்டுரையில் கொழும்பில் உள்ள தமிழ்ச் செயற்பாட்டுக் குழு இந்த அணுகுமுறை பற்றி மிக நுணுக்கமாக ஆராய்ந்துள்ளது. (சண்டே ஒப்சேவர் 19. 03. 95) அநேகமான முற்போக்குக் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் கிளர்ச்சி-எதிர்ப்பு அணுகுமுறையை மௌனமாக ஏற்றுள்ளது வருந்தத்தக்கதாகும். ''சமாதான நடைமுறைகள்'' பயன்தருமுறையில் புலிகளைப் பலவீனப்படுத்தும் வரையிலும் இவர்கள் சந்தர்ப்பம் காரணமாக தாமதத்தை வரவேற்றுள்ளனர்.

ஜனவரி மாதம் 14 ஆம் நாள் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப்பேச்சு எதுவித தீர்மானமுமின்றி முடிவுபெற்றது. அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது சமாதானத் தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று பெப்ரவரி மாத நடுப்பகுதியில் அரசாங்கம் அறிவித்தது. (சண்டே லீடர் 12. 02 .95). தமது தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடத் தயாராக உள்ளதாகவும், இனம், தாய்நாடு மற்றும் சுயாட்சி முதலானவற்றை அடிப்படையாகக் கொண்ட மாற்று ஏற்பாடொன்றை ஏற்கத் தாம் விரும்புவதாகவும் விடுதலைப் புலிகள் மார்ச் மாத முற்பகுதியில் மீண்டும் வலியுறுத்தினர். அத்துடன் அரசின் சமாதானத் தீர்வுத்திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய நான்கு அம்சங்களை விடுதலைப் புலிகள் விபரமாகக் கூறினர் (ஐலண்ட் 06. 03 .95). அவையாவன:-

01. தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு தேசிய பிரச்சினையாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

03. தமிழர்களின் பாரம்பரிய தாயகங்கள் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

04. தமிழர்களின் உரிமைகளும் இறைமைகளும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்பனவாகும்.

இதைத் தொடர்ந்து அமைச்சர்களைக் கொண்ட குழு பேச்சுவார்த்தைக்கு அனுப்பப்படல் வேண்டுமென்று விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தனர் (சண்டே லீடர் 26. 03. 95).

ஏப்ரல் மாதம் 10 ஆம் நாளன்று நடைபெற்ற நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போதும் அரசாங்கம் சமாதானத் தீர்வுத்திட்டம் எதையும் சமர்ப்பிக்கவில்லை. தூதுக்குழுவில் அமைச்சர்கள் எவரும் இடம்பெறவில்லை. அரச அதிகாரமற்ற இக்குழுவில் தனியார் துறைப் பிரமுகர்களும் படை உயர் அதிகாரிகளும் மட்டுமே இருந்தனர். (ஐலண்ட் 10. 04. 95). அதன் பின்னர், மோதல் தவிர்ப்பு எப்பொழுது முடிவுக்கு வரும் என்பது காலத்தின் கைகளில் விடப்பட்டது.

## தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் சமாதானப் பொறியும்.

மோதல் தவிர்ப்பும் சமாதானப் பேச்சுவார்த்தையும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செல்லும் எனத் தென் இலங்கையிலுள்ள விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகள் ஏற்கனவே கணிப்பிட்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது. அந்தக் கணிப்பீடு பொதுவாகச் சரியாகத் தென்படினும் அது காட்டிற்குள் ஒழித்து நின்று போர்புரிகின்ற கெரில்லா அமைப்பிற்கே பொருந்தும். இந்திய-இலங்கை ஒப்பந்தம் அமுலில் இருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இத்தகைய நிலையில்தான் இருந்தனர்.

மாறாக ஒரு விடுவிக்கப்பட்ட பிரதேசத்தை கெரில்லா அமைப்பொன்று தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கின்ற நிலையில் அது மோதல் தவிர்ப்பை ஏற்படுத்தி பயன்தருவகையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியும். இன்று விடுதலைப் புலிகள் கணிசமானளவு பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதுடன் அப்பகுதிகளை நிருவகித்தும் வருகின்றனர். ஆகையால், அரசியல் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்வதற்கான அரசியல் பலம் அவர்களுக்கு உண்டு. அதனால் தனது சமாதானத் தீர்வுத்திட்டத்தை அறிவித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும்படி கொழும்பில் உள்ள தமிழர் செயற்பாட்டுக் குழு மீண்டும் மீண்டும் அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தது. ஏனெனில் விடுதலைப் புலிகள் சமாதானத்தைக் கொண்டுவரக்கூடிய பலம் பொருந்திய நிலையில் இருக்கின்றனர்.

ஆனால் ''புலிகளை பொறிக்குள் விழுத்த வேண்டுமென்ற'' தங்களது முட்டாள்தனமான அவசரத்தில், விடுதலைப் புலிகள் காடுகளில் இல்லை என்ற உண்மையை விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகள் உணரத்தவறிவிட்டன. புலிகள்

கணிசமானளவு நிலப்பகுதியை நிருவகித்து வருவதுடன் தமிழ் மக்களின் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றைக் காணக்கூடிய அரசியல் பலத்தையும் கொண்டுள்ளனர் என்ற உண்மையையும் இச்சக்திகள் நினைவிற் கொள்ளத் தவறிவிட்டனர். அரசாங்கத்தைப் பேச்சுவார்த்தைக்கு வரும்படி விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்ததையும் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடத் தயாராகவுள்ளோம். என்று அறிவித்ததையும் மற்றும் ஒருதலைப்பட்சமாக மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடித்ததையும் இச்சக்திகள் தமது அவசரத்தில் தவறாகக் கருதிக்கொண்டனர். மக்கள் சமாதானத்தை வேண்டி நிற்கின்றனர் என்ற காரணத்தால் விடுதலைப் புலிகள் தமது விருப்பத்திற்கு மாறாக சமாதான நடைமுறைக்குள் தள்ளப்பட்டுவருகின்றனர் என்று இவர்கள் நம்பியது முட்டாள்தனமாகும்.

இரண்டாவது, சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னர் பேச்சுவார்த்தையில் ஈடுபடக்கூடிய பலம் பொருந்திய நிலையில் தாங்கள் உள்ளனர் என்ற நிலையை தென்னிலங்கையிலுள்ள தங்களது எதிரிகளுக்கு உணர்த்தும் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளனர். மேலும் அது விடுதலைப் புலிகளுக்கென நன்கு திட்டமிடப்பட்டு வைக்கப்பட்ட சமாதானப் பொறியினுள் தாங்கள் மாட்டிக்கொண்டுள்ளனர் என்ற நிலை கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகள் மத்தியிலும் அரசாங்கத்தின் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தை நாடியதால் அவர்கள் பெரும் பகைவராக மாறினார்கள். இதனால் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் ஒரு சமாதானத் திட்டத்தை முன்வைக்கமாட்டாதென்பது தென்பட்டது. மோதல் தவிர்ப்பு நிலையில் இருந்து விடுதலைப் புலிகள் விலகிக் கொண்டதால் அவர்களுக்கெதிரான சக்திகள் பெரும் ஆறுதல் அடைந்தனர் என்பதில் ஆச்சரியப்படத் தேவையில்லை.

சமாதானப் பொறிக்குள் மீண்டும் வீழ்ந்துவிடக்கூடாது என்பதனை நிச்சயப்படுத்துமுகமாக அரசாங்கம் பல நடவடிக்கைகளை இப்போது எடுத்துவருகின்றது. இவ்வாறாக விடுதலைப் புலிகளை தடைசெய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் (ஐலண்ட் 01-07-95) தடைசெய்யப்பட்டிருக்கும் காலம் வரை அவர்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கமாட்டாது. மேலும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் இராணுவத் தீர்வை நாடியதை நியாயப்படுத்தும் ஒன்றாகவும் அது அமையும்.

தமிழ்க் கட்சிகள் குறிப்பாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இப்புதிய யதார்த்தத்தை உடனடியாகப் புரிந்து கொண்டது. தீர்வுத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுமிடத்து பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேச்சுவார்த்தை செய்யக்கூடிய ஆற்றல் விடுதலைப் புலிகளுக்கு உண்டு. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் கொழும்பிலிருந்து இயங்கும் தமிழ்க் கட்சிகளும் பின்னர் அநேகமாக அரசியலில் இருந்து மறைந்துவிடும். விடுதலைப் புலிகள் சமஷ்டி முறையிலான தீர்வுத்திட்டம் ஒன்றினை ஏற்று அதனை நடைமுறைப்படுத்த விரும்பும் பட்சத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி விட்டுக்கொடுக்கும் என்று இம்முன்னணியைச் சேர்ந்த ஏ, தங்கத்துரை தெரிவித்தார். (சண்டே ஒப்சேவர் 07-05-95). இப்படியாக ஒன்று நிகழுமானால் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அதைத் தீவிரமாக எதிர்த்துச் செயற்படும் என்று எங்களுக்குள்ள சொற்ப அரசியல் அறிவு எமக்கு கூறுகின்றது.

ஏப்பிரல் மாதம் 19ஆம் நாளுக்குப் பின்னர் தீர்வுத் திட்டம் எதுவும் சமர்ப்பிக்கக்கூடாது என்று நிராகரித்த கட்சி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாகும். தற்போதைய அமைதியற்ற சூழ்நிலையில் தீர்வுத்திட்டம்பற்றி அறிவிப்பது நல்லதல்ல என்று வாதாடிய கலாநிதி நீலன் திருச்செல்வம், விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பின்றி நிலையான தீர்வையும் சமாதானத்தையும் காணமுடியும் என தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி நம்பவில்லை என்று அடுத்த கணப்பொழுதில் தெரிவித்தார் (தினகரன் 07-05-95). நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிமுறை ஒழிப்புடன் சேர்த்து அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத்திட்டம் அறிவிக்கப்படல் வேண்டும் என்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த மற்றுமொரு உறுப்பினரான வி. ஆனந்தசங்கரி அறிவித்தார். (வீரகேசரி 28-06-95). இக்கூற்றுக்களை ஆராய்கையில் ஒரு தீர்வுத்திட்டமும் அறிவிக்கப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி கொண்டுள்ளது புலப்படுகின்றது. சமாதானத் தீர்வுத் திட்டம் ஒன்று அறிவிக்கப்படல் வேண்டும் என்று வற்புறுத்திய சமாதானக் குழு ஒன்றை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் ஒருவர் கடுமையாகக் கண்டித்தார்.

இச்சமாதானக்குழு அரசாங்கத்தை அடிபணிய வைக்க முயல்கின்றது என்று அவர் குற்றம் சாட்டினார். சமாதானத்

தீர்வுத்திட்டம் ஒன்று அறிவிக்கப்படுவதற்கு முன்னர் இலங்கைப் படையினரால் விடுதலைப் புலிகள் அழித்து ஒழிக்கப்பட வேண்டுமென்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி விரும்புகிறது என வாதிடக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறாக அரசாங்கம் தீர்வுத்திட்டத்தை வெளியிடுவதை எதிர்க்கும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அதற்குப் பதிலாக ஏப்பிரல் 19ஆம் நாள் முறிவடைந்த பேச்சுவார்த்தை மீண்டும் முன்னெடுத்துச்செல்லப்படுவதை விரும்புகிறது என்று டாக்டர் பாக்கியசோதி சரவணமுத்து மேலும் கூறுகின்றார். இப்போதுள்ள நிலைமைக்கு மறைமுகமாக ஆதரவளிக்கும் நிலையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இருந்தாலும் அதைத் தவிர அதனால் வேறு ஒன்றும் செய்ய முடியாது. எனவே அது முழு அளவிலான போருக்கே தயாராக இருக்கிறது என அவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மீது இரக்கப் படுகின்றார். (சண்டே லீடர் 25-06-95).

ஆனால் திரு. சரவணமுத்து துரதிஷ்டவசமாக ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடத்தவறிவிட்டார். பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்ப முடியாதென்பது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்குத் தெரியும். அத்துடன் அதுபற்றி அது மகிழ்ச்சியும் அடைகிறது. சமாதானத் தீர்வுத்திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டால் அதைப் பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்த்துக்கொள்வதற்கான ஆற்றலைப் புலிகள் கொண்டுள்ளனர் என்று அறிந்துள்ள தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அதுபற்றி அச்சமடைகின்றது. சமாதானத் தீர்வுத்திட்டம் ஒன்று இல்லாத பட்சத்தில் போர் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும் என்று அறிந்துள்ள தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அதனை வரவேற்கின்றது. சமாதானப் பேச்சுக்களை நடத்தும் அளவிற்கு இவர்கள் பலம் பொருந்திய நிலையில் உள்ளதால் மீண்டும் தொடங்கப்படும் போர் விடுதலைப் புலிகளைப் பூண்டோடு அழித்துவிடும் என்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி நம்புகின்றது. இவ்விடயத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அரசாங்கத்துடனும் சிங்களப் பேரினவாதத்துடனும் ஒன்றிணைந்து செயற்படுகின்றது. தமிழரின் தேசிய போராட்டத்திற்கு எதிராகத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி செய்து வந்த கறைபடிந்த துரோகத்தனமிக்க வரலாற்றில் இதுவும் ஒரு படிக் கல்லாகும்.

"சகலவிதமான அடிமைத்தனத்தையும் ஒழிக்காமல் மனித விடுதலை சாத்தியமாகாது. பாட்டாளி வர்க்கமோ மிக ஒடுக்கப்பட்ட, எந்தவித உரிமைகளுமற்ற நிலையிலுள்ள ஒரு வர்க்கமாக விளங்குகின்றது. சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளையும் விடுவிக்காமல், பாட்டாளி வர்க்கத்தால் தன்னைத் தானே விடுவித்துக்கொள்ள முடியாது".

'மனிதன் தனக்காக மட்டும் உழைத்தால் அவன் ஒரு பெரிய அறிவியலாளியாகவோ, மாபெரும் அறிவாளியாகவோ அல்லது தலைசிறந்த கவிஞனாகவோ ஆகமுடியும். ஆனால் அவனால் என்றுமே உண்மையிலேயே நிறைவான மகத்தான மனிதனாகமுடியாது''.

— கார்ல் மார்க்ஸ்

மனிதன் என்பவன் தன் செயல்களுக்கு தானே பொறுப்பாளியாகவும், தன்மனச்சாட்சியையே நீதிமன்றமாகவும் கொண்டுள்ள ஒரு சுதந்திரப் பிரதிநிதியாவன்.

நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் நான் மறுக்கிறேன். ஆனால் அதைச் சொல்ல உனக்குள்ள உரிமைக்காகச் சாகும்வரை போராடுவேன்.

உண்மை பூட்டி வைக்கப்படும் பொக்கிசம் அல்ல. அது உரிமைப் போராட்டத்தின் வெற்றிக்கொடி. அது பலமுறைகள் சிதைக்கப்படலாம் ஆனாலும் அது அழியாதது.

சிந்தனையாளர்
வால்டேர்

# திரும்பி வரமாட்டேன்

அன்னையே!

நான் திரும்பி வரமுடியாது.

என் ஆயிரம் புண்களில்

சொர்க்கத் தங்கம் கசிகிறது.

தினந்தோறும்

நூறு தோட்டாக்களால்

நான் சாகிறேன்.

நூறுமுறை மறுபடி எழுகிறேன்

முன்னிலும் பலமுள்ளவனாக.

என் இரண்டு கொம்புகள்

இரட்டைக்கால் மின்சாரக் கோபுரங்கள்.

என் கண்கள்

சரக்குக்கப்பலின் துறைமுகம்.

ஒவ்வொரு முள் எலும்பும்

நகரம்.

ஒவ்வோர் உயிரணுவும்

தொழிற்சாலை

என் மூளையின் ஒவ்வொரு சைகையும்

ஒரு பால் மண்டலம்.

- பெரன்க் யுஹாஸ்
(ஹங்கேரி)